Alternatives India
VIKALP sangam

தொகுதி.1
மே 2020

‘சாதாரண' மக்களின் அசாதாரணமான பணிகள்

தொற்றுநோய்க்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்

சமூகக்குழுக்களுக்கும்
குடிமைச்சமூக அமைப்புகளுக்கும்
அரசாங்க நிறுவனங்களுக்கும்
பயன்படும் எடுத்துக்காட்டுகள்,
படிப்பினைகள், பரிந்துரைகள்

உள்ளடக்கம்

அறிமுகம் 01
உணவு 03
சந்தை 08
வாழ்வாதாரம் 15
உடல்நலம் 28

பங்களித்தவர்கள், மேற்கோள் காட்ட, விகல்ப் சங்கம் பற்றி அறிய கடைசிப் பக்கம் செல்லவும்

அறிமுகம்: இந்த ஆவணத்தின் நோக்கம்

மார்ச் 2020 முதல், கோவிட்19 தொற்றுநோய் சார்ந்த நெருக்கடிகள் இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களைப் பாதித்துள்ளன. நாட்டின் 90 விழுக்காட்டுக்கும் மேலான பணியாளர்கள் அமைப்புசாரா துறைகளிலேயே உள்ளனர். பெரும்பாலான முதனிலைத்துறை, இரண்டாம்நிலைத்துறை உற்பத்தியாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்குத் தினசரி சந்தைப்படுத்துதலைச் சார்ந்துள்ளனர். உற்பத்தியை நிறுத்தியதும், சந்தைப்படுத்த முடியாமையும் அவர்களது வாழ்வாதாரத்தைப் பறித்துள்ளன. புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தங்கள் சொந்த ஊர்களிலிருந்து பெயர்ந்திருப்பது கூடுதல் பாதிப்பு. பொதுப்போக்குவரத்து திடீரென முடக்கப்பட்டதால் அவர்கள் மிகக்கடுமையான இடர்களைச் சந்தித்துள்ளனர். உணவு, நீர், உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவேற வாய்ப்பில்லாமல் பல லட்சம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களின் உடனடி நெருக்கடி நமக்கு நேரடியாகத் தெரிவதால், குடிமைச் சமூகமும் பல மாநில அரசுகளும் நிவாரணம் வழங்கத் தன்னிச்சையான முன்னெடுப்புகள் எடுத்துள்ளன. ஆனால் இத்துயரின் வேர்களுக்குச் சென்று மூலக்காரணங்களை எதிர்கொள்ளும் முயற்சிகள் அரிதாகவே உள்ளன. இந்தியப் பொருளாதார, சமூக, அரசியல், குடிமை அமைப்புகளில் உள்ள விரிசல்களைக் கோவிட் நெருக்கடி அப்பட்டமாக அம்பலப்படுத்தியிருக்கிறது. உற்பத்தியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும், குறிப்பாகப் பெண்கள், தலித்கள், பழங்குடியினர் ஆகியோருக்கும் பிற விளிம்புநிலை மக்களுக்கும் உள்ள வலுவற்ற நிலையும் இதில் அடங்கும். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத் தொலைதூரப் பரிமாற்றங்கள், வணிகம் ஆகியவற்றைச் சார்ந்திருப்பதும் இதில் அடங்கும். சூழலியல் சிதைவுகளுக்கும் சமூக-பொருளாதாரக் கடைநிலைக்கும் உள்ள தொடர்புகளையும் இது வெளிப்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்தமாக, பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 'வளர்ச்சி' மாதிரிகள் நீடிக்க இயலாமையும் அவற்றின் ஏற்றதாழ்வுகளும் தெளிவாகியுள்ளன.

இத்தகைய சூழலில், உடனடி நிவாரண, புனர்வாழ்வு ஏற்பாடுகள் செய்வது எந்த அளவு அவசியமோ, அதே அளவு பொருளாதார, சமூக, அரசியல் அணுகுமுறைகள் குறித்து அடிப்படையான மீளாய்வு செய்வதும் அவசியம். உலகின் பிறபகுதிகளைப் போலவே இந்தியாவும் நல்வாழ்வுக்கான மாற்று வழிகளைக் கண்டறிந்து, கண்ணியமான வாழ்வாதாரங்களை எல்லாருக்கும் உருவாக்கி, சூழலியல் வளங்குன்றாமை நோக்கி நகர்ந்தாகவேண்டும். (ஊரக, நகர்ப்புற, புறநகர்) சமூகக்குழுக்களுக்கு அதிகாரம்

அறிமுகம்: இந்த ஆவணத்தின் நோக்கம்

வழங்கி உணவு, உடல்நலம், நீராதாரம், மின்சாரம்/எரிசக்தி, உறைவிடம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளையும் விழைவுகளையும் தாமே நிறைவேற்றி நிர்வகித்துக்கொண்டு தற்சார்பையும், இயன்றவரை தன்னிறைவையும் எட்டுவதற்கான வழிகளில் செயல்படவேண்டும்.

இப்படியான சமூகத்தை - உண்மையான சுயாட்சியை - நோக்கிய நகர்வு வெறும் ஏட்டளவில் நிகழ்வதல்ல. இந்தியாவெங்கும் பல நூற்றுக்கணக்கான முன்னெடுப்புகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தொடர் ஆவணங்களில் அத்தகைய எடுத்துக்காட்டுகளை வழங்கவிரும்புகிறோம். இவற்றிலிருந்து பல இன்றியமையாத படிப்பினைகள் பெற்றுப் பிற இடங்களிலும் செயல்படுத்தி அதே போன்ற விளைவுகளை ஏற்படுத்தலாம். கோவிட்19 நெருக்கடியின் போது நாம் சந்தித்த ஒவ்வொரு பெரிய சிக்கலுக்கும் (அவை முன்பே இருந்தவைதாம் எனினும், இப்போது தெளிவாகத் தெரிகின்றன) தீர்வுகள் உள்ளன என்பதையும், ஏற்கனவே அத்தீர்வுகளை இந்தியாவில் எங்கேனும் பல சமூகக்குழுக்களோ, குடிமைச் சமூகங்களோ, அரசு அமைப்புகளோ செயல்படுத்தியுள்ளன என்பதையும் காண்பித்திருக்கிறோம்.

இந்த முன்னெடுப்புகளைப் புரிந்துகொண்டும், அவற்றிலிருந்து கற்றுக்கொண்டும், உங்களால் இயன்றவரை உங்களுக்குத் தெரிந்த மொழிகளிலோ ஊடகங்களிலோ இவற்றைப் பகிர்ந்துகொள்ள அழைப்புவிடுக்கிறோம். உங்கள் சுய அனுபவங்களையும், நீங்களறிந்த பிற சான்றுகளையும் எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

தொடர்புகள்

பொது ஒருங்கிணைப்பு: ஜூகி பாண்டே, studiojuhi@gmail.com, 9820039110

முக்கிய படிப்பினைகளைப் பிற இடங்களிலும் சமூகங்களிலும் செயல்படுத்துவதில் உதவி (ஒவ்வொரு முன்னெடுப்புக்கும் குறிப்பட்ட தொடர்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன): கிஜ்ஸ் ஸ்பூர், gijs@auroville.org.in, 9943820241 (வாட்சாப்/குறுஞ்செய்தி மட்டும்)

நெருக்கடி: கிராமங்களில் உணவுப் பாதுகாப்பின்மை

தீர்வு: உணவுத் தன்னாட்சியின் மூலம் சமூகக்குழுகள் வழங்கும் உணவுப்பாதுகாப்பு

நிழற்படங்கள்: ஆஷிஷ் கோத்தாரி

(இ) நரசம்மாவும் பிற DDS பெண்களும் PRA, பஸ்தாபூரில்; (வ) சங்கம் இயற்கை அங்காடி, சாகீராபாத்

தக்கான வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த தலித், பழங்குடிப் பெண் விவசாயிகள், தெலுங்கானா

கடந்த 25-30 ஆண்டுகளில் தெலுங்கானாவின் ஜாகீர்பாத் மாவட்டத்திலுள்ள பல ஆயிரம் தலித் பெண்களும் நாட்டுப்புறப் பழங்குடிப் பெண்களும் ஒரு வேளாண்மைப் புரட்சியை நிகழ்த்தியுள்ளனர். 70 கிராமங்களில் பெண்கள் கூட்டமைப்புகள் மூலமும் தக்கான வளர்ச்சிக் கழகத்தில் உறுப்பினர்களாவதன் மூலமும், அவர்களது புன்செய் நிலங்களில் பாரம்பரிய விதைகளையும்(குறிப்பாகச் சிறுதானியங்கள்) கால்நடைகளையும் மீட்டு, உயிர்ப்பன்மயத்தை உறுதிசெய்துள்ளனர்; முழுக்க உள்ளூர் இடுபொருள்கள் சார்ந்து, இயற்கை வேளாண்மைக்கு மாறியுள்ளனர்; ஊடுபயிர்கள், பல பயிர்கள் பயிரிடுவதை மீட்டுள்ளனர்; எல்லாருக்கும் எளிதில் கிட்டக்கூடிய விதத்தில் விதை வங்கிகளை ஒவ்வொரு கிராமத்திலும் உருவாக்கியுள்ளனர்; பெண்களுக்கான நிலவுரிமைக்காகப் போராடியுள்ளனர். இவற்றின் மூலமாக, உணவுப் பாதுகாப்பின்மை, ஊட்டச்சத்தின்மை ஆகியவைமாறிப் போதுமான உணவு, ஊட்டச்சத்துடன் கூடிய உடல்நலம் ஆகியவை கிட்டியுள்ளன. சுயேட்சையான பொது விநியோக முறை ஒன்றையும் ஏற்படுத்தி ஏழைமக்களுக்கு விலைகுறைந்த, ஊட்டச்சத்துமிக்க உணவு கிடைப்பதை உறுதிசெய்துள்ளனர். ConFarm என்ற உற்பத்தியாளர்-நுகர்வோர் அமைப்பின் மூலம் ஐதராபாத்தில் 100 குடும்புங்களுக்கு நேரடியாக விற்க ஏற்பாடு செய்துள்ளனர். சாதிய, ஆணாதிக்கச் சமூகத்தில் அவர்களுக்கு எப்போதும் கிட்டியிராத மதிப்பினையும் ஐ.நா.சபையின் ஈகுவேட்டர் (Equator) விருதினையும் இந்த முன்னெடுப்பு அவர்களுக்குப் பெற்றுத்தந்துள்ளது.

நெருக்கடி: கிராமங்களில் உணவுப் பாதுகாப்பின்மை

தீர்வு: உணவுத் தன்னாட்சியின் மூலம் சமூகக்குழுகள் வழங்கும் உணவுப்பாதுகாப்பு

கோவிட்19 ஊரடங்கின் போது, இப்பெண்களின் குடும்பங்களுக்குப் போதுமான உணவு கிடைத்தது. தமது குடும்பங்களுக்கு மட்டுமன்றி, பிற நிலமற்ற குடும்பங்களோடும் பகிர்ந்துகொண்டுள்ளனர்; மாவட்ட நிவாராண நடவடிக்கைகளுக்குத் தானம் செய்துள்ளனர்; ஜாகீர்பாத் நகரின் நகராட்சிப் பணியாளர்கள், காவல்துறையினர், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோருக்குத் தினமும் 1000 கோப்பைகள் சிறுதானியக் கஞ்சி வழங்கியுள்ளனர்.

படிப்பினைகள்

வெளியிலிருந்து அளிக்கப்படும் இடுபொருட்களைக் குறைத்து, உள்ளூர் வேளாண்-சூழலியல் நிலைகளை மதித்து, உள்ளூர் மக்களின் மரபான அறிவைச் சார்ந்து வளர்த்தெடுத்தல், உள்ளூர்ச் சந்தைகளையும் சமூகங்களையும் ஒருங்கிணைத்தல் ஆகியவை மூலம் புன்செய் நிலங்களில்கூட உணவுத் தன்னாட்சியும் உணவுப் பாதுகாப்பும் அடைந்துவிடமுடியும். இந்தியாவின் வேளாண் வளர்ச்சி முறை இதற்கு நேரெதிராக உள்ளது; அடிப்படையான, முழுமுற்றான மாற்றம் வேண்டிநிற்கிறது.

தொடர்பு

ஜெயஸ்ரீ செருக்குரி, jayasri.dds@gmail.com

இவர்களுடனான கோவிட் கால உரையாடலை இங்கு காணலாம்:
https://vscoronatimes.blogspot.com/2020/04/vikalp-varta-2-self-reliant-village.html

நிழற்படம்: ஆஷிஷ் கோத்தாரி

நிழற்பட உதவி: DDS

(இ) சாமளம்மா(DDS), இப்பப்பள்ளி கிராமம், தெலுங்கானா; (வ) DDS கோவிட்19 நெருக்கடியின்போது ராகிக்கஞ்சி வழங்குகையில்

நெருக்கடி: கிராமங்களில் உணவுப் பாதுகாப்பின்மை

தீர்வு: உணவுத் தன்னாட்சியின் மூலம் சமூகக்குழுகள் வழங்கும் உணவுப்பாதுகாப்பு

நிழற்படங்கள்: ஆஷிஷ் கோத்தாரி

(இ) இயற்கை முறை விளைச்சலோடு கேதியா விவசாயி ; (வ) கேதியா இயற்கை விளைநிலம் - அம்ரித்பானி சின்னத்தோடு

கேதியா கரிம கிராமம், பீகார்

ஜாமுய், பிகார் பகுதியிலுள்ள கேதியா கிராமத்தின் 97 வேளாண் குடும்பங்கள் மண்ணுயிர்ப்பு முறை (Living Soils approach) என்ற சூழல்சார் வேளாண்முறையை 2014ம் ஆண்டுமுதல் பின்பற்றிவருகின்றனர். இதன் நோக்கங்கள் மண்ணை உயிர்ப்பொருள்கள் மூலமாக உயிர்ப்பிப்பதும், வேளாண்வேதியல் பொருள்களின் பயன்பாட்டை நிறுத்தி உயிர்ப்பன்மயத்தை மீட்டெடுப்பதும் ஆகும். அதுவரை, இக்கிராமம் வேளாண்வேதியல், நிறுவன விதைகள், அதிகப்படியான நீர்ப்பாசனம், நெல்/கோதுமை என்று ஒற்றைப்பயிர் செய்தல் என்ற சுழலில் இந்தியாவெங்கும் 'பசுமைப் புரட்சி' விவசாயிகள் பாதிக்கப்பட்டதுபோல் சிக்கியிருந்தது.

கிரீன்பீஸ் இந்தியா, மாநில வேளாண்மைத் துறை ஆகியவற்றோடு இணைந்து, சில இடங்களில் நடந்த ஆரம்பகட்ட ஆய்வுக்குப்பிறகு, கடந்த 4-5 ஆண்டுகளில் இச்சமூகம் தங்களது விவசாயச் செயல்பாடுகளை முழுமையாக மாற்றியமைத்துள்ளனர். தங்களுக்குத் தேவையான அனைத்து உணவுப்பொருள்களையும் (உப்பு, சர்க்கரை தவிர) இயற்கைமுறையில் விளைவிக்கின்றனர்; கிராமத்துக்கு வெளியிலிருந்து வரும் எந்த இடுபொருள்களையும் பயன்படுத்துவதில்லை. மேம்பட்ட பன்மயச்சூழல் பூச்சித்தாக்குதலிருந்து காக்கிறது; மண்ணின் வளத்தைப் பேணுகிறது. கிணறுகளைச் சீரமைத்து, வீட்டுத்தேவைக்கும் பாசனத்துக்கும் தேவையான நீரை ஆண்டுமுழுதும் பெறுகின்றனர்; ஆழ்துளைக் கிணறுகளின் பயன்பாட்டை நிறுத்திவிட்டனர். முக்கியமாக, இந்த மாற்றம் உழவர்கள், அரசு அதகாரிகள் ஆகிய இருதரப்பினரிடையேயும் ஏற்பட்ட மனமாற்றத்தின் விளைவாக நிகழ்ந்துள்ளது.

பீகார் அரசாங்கம் சூழிலியலுக்குகந்த விவசாயத்துக்கு ஆதரவான போக்கினை எடுப்பதற்கு இந்த முன்னெடுப்பு உந்துதலாக இருந்திருக்கிறது. அதன் மூன்றாவது வேளாண்மைத் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயற்கை வேளாண்மை செய்யும் மாதிரி கிராமம் ஒன்றை வளர்ப்பதாக உறுதியளிக்கிறது; எல்லா நெடுஞ்சாலைகளின் ஓரமாகவும் கங்கை

நெருக்கடி: கிராமங்களில் உணவுப் பாதுகாப்பின்மை

தீர்வு: உணவுத் தன்னாட்சியின் மூலம் சமூகக்குழுகள் வழங்கும் உணவுப்பாதுகாப்பு

நதியின் இரு புறங்களிலும் கரிமப் பரப்புகள் உருவாக்குவதென்றும், 21000 ஏக்கர் விவசாய நிலங்களை 2020ம் ஆண்டு முடிவுக்குள் இயற்கை வேளாண்மைக்கு மாற்றுவதென்றும் முடுவுசெய்யப்பட்டுள்ளன.

கோவிட்19 நோய்த்தொற்றின்போது, இச்சமூகக்குழு முகக்கவசங்களைத் தாமாகவே செய்து விநியோகித்து வருகின்றனர்; இச்செயல்பாடு நடத்தை மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுமுடக்கத்தின் காரணமாக தினக்கூலிப் பணியாளர்களுக்கும் சில விவசாயிகளுக்கும் வாழ்வாதாரம் அச்சுறுத்தப்படுவதைக் கவனித்து, கேதியாவின் விவசாயிகள் சமூகக் கூட்டுணர்வுடன் எதிர்வினையாற்றியுள்ளனர். சுற்றுப்புற கிராமங்களில், அரசுப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வராத 426 குடும்பங்களுக்கு உணவுப் பொட்டலங்கள் (இயற்கை அரிசி, கோதுமை மாவு, பருப்பு, கடுகெண்ணெய், சுண்டல்) வழங்கியுள்ளனர். உள்ளூர் ஊடகங்கள், ஊராட்சி உறுப்பினர்கள், குடிமைச் சமூகக் குழுக்கள் ஆகியோருடன் இணைந்து இத்தகைய குடும்பங்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கு உதவியுள்ளனர்.

படிப்பினைகள்

வெளி நிறுவனங்களின் இடையீடின்றி உள்ளூரிலேயே நிர்வகிக்கப்படும் இயற்கை விவசாயத்தின் மூலம் சமூகங்கள் உணவுப் பாதுகாப்பை அடைந்து, கோவிட்19 போன்ற நெருக்கடிகளைத் தாண்டிச்செல்ல முடியும். கூடுதலாக தம்மைப்போன்ற நன்னிலையில் இல்லாத பிறருக்கு உதவவும் இயலும். அரசு நிறுவனங்களும் குடிமைச் சமூகமும் கொள்கை உருவாக்கத்திலும், திட்டத்தைச் செயல்படுத்துவதிலும் உதவிகள் செய்து, இச்செயல்முறையைத் தாமாகவே தக்கவைப்பதற்கான உள்ளூர் திறன்களை வளர்ப்பதற்கு முனையும்வரை, இந்த மாற்றத்தை விளைவிப்பதில் பங்களிக்கமுடியும்.

தொடர்பு

இஷ்தாயக் அகமத், ishteyaque.ahmed@greenpeace.org

நிழற்படங்கள்: ஆஷிஷ் கோத்தாரி

கேதியா கோவிட் நிவாரணப் பணிகளின்போது

கிராமங்களில் உணவுப் பாதுகாப்புக்கான பரிந்துரைகள்

- விவசாயிகள், மேய்ப்பர்கள், மீனவர்கள், காட்டில் உறைபவர்கள், கைவினைஞர்கள் என்று இந்தியாவில் பெரும்பான்மையாக உள்ள சிறு உற்பத்தியாளர்களை முன்னிலைப் படுத்தவேண்டும்.
- அத்தகைய மக்களின் - குறிப்பாக அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களின் - கூட்டமைப்புகளை உருவாக்க வழிவகுக்கவேண்டும்; உற்பத்திச் சாதனங்களும் விளைநிலமும் கிடைக்கப் போதுமான வாய்ப்புகள் கிடைக்கச்செய்யவேண்டும்.
- இயற்கை முறையில், உயிரியல் பன்மயம்கொண்ட, உள்ளூர் சூழலியல் சார்ந்த விவசாயத்தை ஆதரித்து, பரப்பி, பின்பற்றவேண்டும். உணவுக்கு மிக அதிக முக்கியத்துவம் தரவேண்டும். சமூக விதை வங்கிகளை உருவாக்கி, உள்ளூர் மரபணு கொண்ட பயிர்களையும் கால்நடைகளையும் பாதுகாத்துச் சேமிக்கும் மரபான முறைகளின் அடிப்படையில் புதிய முறைகளை வளர்த்தெடுக்கவேண்டும்.
- சரியான அளவில் நீரைப் பயன்படுத்தவேண்டும்; புன்செய் நில, மானாவாரி விவசாயத்தை முன்னிலைப்படுத்தவேண்டும்; ஆழ்துளைக் கிணறுகளையும் நீர் அதிகம் தேவைப்படும் பயிர்களையும் பயன்படுத்துவதைத் தவரித்து, நீரைக் குறைவாகப்பயன்படுத்தும் கிணற்றுப் பாசனத்தையும் பிற மரபான, புதிய முறைகளையும் ஊக்கப்படுத்தவேண்டும்.
- சிறு உற்பத்தியாளர்கள் அத்தகைய வேளாண்மைமுறைக்கு மாறுவதற்கு உதவும்வகையில் ரசாயன உரங்களுக்கும் பிற பசுமைப்புரட்சி தொடர்பான செயல்களுக்கும் வழங்கப்படும் மானியங்களை இயற்கை இடுபொருள்களுக்கும் இன்னபிற வசதிகளுக்கும் இடைக்காலத்தில் மடைமாற்றவேண்டும்; ஆனால் அத்தகைய ஆதரவு தற்சார்பையும் சுயாட்சியையும் அடைவதற்கு உதவுவதாக இருக்கவேண்டும்; அரசாங்கத்தின் மீது நிரந்தர சார்பை ஏற்படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது.
- வரிவிதிப்பு, பிற முறைகளின் மூலமாகப் பெரிய உற்பத்தியாளர்களை, குறிப்பாக பெருநிறுவனங்களை ஊக்கக்குறைப்பு செய்திடவேண்டும்.
- பொது விநியோகத்திட்டம், சத்துணவுத் திட்டம், அங்கன்வாடி போன்ற திட்டங்கள் (உள்ளூர் மக்களையே அவற்றை நடத்த ஊக்குவித்து), மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ளூர் உற்பத்தியை வாங்குவதை முன்னிலைப்படுத்தவேண்டும். உள்ளூர் வேளாண்மை, சுற்றுச்சூழலுக்கும், சிறு உற்பத்தி முறைகளுக்கும் உகந்த பயிர்கள், கால்நடைகள், மீன்பிடிப்பு ஆகியவற்றை ஊக்கப்படுத்தவேண்டும்.
- உணவுப் பாதுகாப்புக்கும் சுயாட்சிக்கும் பங்கம் விளைவிக்கும் புதிய வணிகவிதி களைவு உடன்படிக்கைகளிலோ கட்டற்ற வணிகத்துக்கான உடன்படிக்கைகளிலோ கையெழுத்திடக்கூடாது; ஏற்கனவே இருக்கும் உடன்படிக்கைகளிலிருந்து வெளியேறவேண்டும்.

நெருக்கடி: உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தல்

தீர்வு: நேரடி உழவர்-நுகர்வோர் இணைப்புகள்

நிழற்படங்கள்: மானஸ் அர்விந்த்

குருகிராம் உழவர் சந்தை

குருகிராம் இயற்கை உழவர் சந்தை (GOFM) 2014ம் ஆண்டுமுதல் கோவிட் ஊரடங்குவரை தொடர்ந்து இயங்கிவந்துள்ளது. இந்த முன்னெடுப்பு குருகிராமைச் சுற்றியுள்ள 20 இயற்கை விவசாயிகளையும் குருகிராமில் வாழும் 500 குடும்பங்களோடு இணைத்துள்ளது. இந்த ஊரடங்கின் விளைவாக, இச்சந்தை இணையவழிக்கு மாறியது; நுகர்வோர் வீடுகளிலேயே பொருள்கள் வழங்கப்பட்டன. இத்தனை ஆண்டுகளாக இது லாபநோக்கமற்ற தன்னார்வலர் முயற்சியாகவே இருந்துள்ளது; அற நெறிமுறைகளின் அடிப்படையில் இயங்குகிறது.

குருகிராம் சந்தையின் விழுமியங்களை ஏற்றுக்கொண்டுள்ள, பெரும்பாலும் உள்ளூரைச் சேர்ந்த சிறு, பெரு விவசாயிகள் இதில் உள்ளனர். சந்தையில் உழவர்கள், இயற்கை அங்காடிகள் ஆகிய இரு குழுக்களும் உள்ளன. விலைகளை உழவர்களே முடிவுசெய்கின்றனர்.

தன்னார்வலர்களும், ஆர்வமிக்க வாடிக்கையாளர்களும் பண்ணைகளுக்குத் தொடர்ந்து சென்றுபார்த்து, இயற்கைவேளாண் விளைபொருள்கள்தானா என்று சரிபார்க்கின்றனர். குருகிராம் சந்தை அங்ககச் சான்றிதழ்களில் நம்பிக்கை வைப்பதில்லை; நம்பிக்கைஅடிப்படையிலேயே செயல்படுகிறது. ஏமாற்றிய உழவர்கள் இந்த அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டதும் உண்டு. ஆனால், இயற்கைவேளாண்மை முறையில் இருப்பதில் பலன்கள் அதிகமிருப்பதால் இத்தகைய நிகழ்வுகள் மிக அரிதாகவே உள்ளன.

இந்த அமைப்பின் நிறுவனர்களில் ஒவரான மானஸ் அரவிந்த் markets-india@googlegroups.com என்ற இணைய உழவர் குழுவின் நிர்வாகிளில் ஒருவர்; இக்குழு ஏற்கனவே உழவர் சந்தைகளை நடத்துபவர்களுக்கும், தொடங்க விரும்புபவர்களுக்குமானது.

நெருக்கடி: உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தல்

தீர்வு: நேரடி உழவர்-நுகர்வோர் இணைப்புகள்

படிப்பினைகள்

ஒவ்வொரு ஊரகப்பகுதியும் அண்டைய கிராமங்களோடும் நகரங்களோடும் பெருநகரங்களோடும் இணைக்கப்படமுடியும்; விவசாயிகள், மேய்ப்பர்கள், மீனவர்கள், காட்டில் உறைபவர்கள், கைவினைஞர்கள் ஆகியோர் சந்தைகள் அமைத்து நுகர்வோரை நேரடியாகச் சென்றடையவதற்கோ, நேர்மையான சிறு வணிகர்கள் விற்பனையகங்கள் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யலாம். பல அத்தியாவசியப் பொருள்களுக்கு உள்ளூரிலேயே தேவையிருக்கும் என்பதால் தொலைதூர வணிகத்தின் தேவையைக் குறைக்கலாம் - தொலைதூர வணிகம் நிலையற்றது என்பதை கோவிட் காட்டியுள்ளது; லாபமும் பெரும்பாலும் இடைத்தரகர்களுக்கும் நிறுவனங்களுக்கும் போய்ச்சேர்கிறது.

ஆனால் இந்த ஏற்பாட்டில் உள்ள பெரும் சவால் இயற்கை உணவை வாங்கும்திறன். எப்படி குறைந்த வருமானம் கொண்ட நுகர்வோரும் இவற்றை வாங்கக்கூடிய விலையில் கிடைக்க வழிசெய்யலாம்? மானியங்கள், குடிமைச் சமூகங்கள், அரசின் கொள்மை இடையீடுகள் ஓரளவுக்கு உதவலாம்

.

தொடர்பு

மானஸ் அரவிந்த், manasarvind@gmail.com

தொடர்புள்ள கோவிட்கால உரையாடலை இங்கு காணலாம்: https://vscoronatimes.blogspot.com/2020/04/vikalp-varta-1-farmers-markets.html

நிழற்படங்கள்: மானஸ் அர்விந்த்

நெருக்கடி: உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தல்

தீர்வு: நேரடி உழவர்-நுகர்வோர் இணைப்புகள்

நிழற்படம்: தயானந்த் நிக்கம்

சத்தரா விவசாயிகள் அழியக்கூடிய விளைச்சலை தேர்ந்தெடுத்த இடங்களுக்கு எடுத்துச்செல்கின்றனர்

கோவிட் காலத்தில் சதராவில் 'வீடுகளில் நேரடி' பரிமாற்றம்

குளிர்கால அறுவடைக் காலம் முடியும் தருவாயில் கொரோனா பரவல் தொடங்கியதால், சதராவில் உள்ள உழவர்களுக்கு இரு சவால்கள் தோன்றின - அறுவடை செய்து பயிர்களைக் குவிக்க வெளியூர் வேலையாட்கள் கிடைக்காதது, அறுவடையை பிற இடங்களுக்கு அனுப்பப் போக்குவரத்து இல்லாதது. இதனால் இடைத்தரகர்கள் அவர்களது அறுவடையை வாங்காமல்விட்டனர் அல்லது மிகக்குறைந்த விலைக்கு வாங்கினர். புலம்பெயர் தொழிலாளர்கள் திடீரென்று தங்கள் ஊர்களுக்குத் திரும்பத் தொடங்கியதால், மாநிலமெங்கும் விவசாயப் பணிகள் முடங்கின. மத்திய அரசின் எதிர்வினை போதுமானதாக இல்லை.

சதராவின் உள்ளாட்சி நிர்வாகத்தினர் உழவர்கள், உள்ளூர் இடைத்தரகர்கள், குடிமைச் சமூகம், சமூக அறிவியலாளர்கள் ஆகியோருடன் சேர்ந்து உள்ளூர் தீர்வுகளைத் தேடத் தொடங்கினர். நகராட்சியின் சுகாதாரத்துறைத் தலைவராக உள்ள சன்சிட் துமால் அனுபவமிக்க சமூக ஊழியரான அவினாஷ் போல் என்பவருடன் சேர்ந்து இத்தகைய முன்னெடுப்புக்குத் தேவையான ஏற்பாடுகளைத் திட்டமிட்டனர். மளிகை, பால், காய்கனிகளை வீட்டுக்கேக் கொண்டுசேர்ப்பதற்கு அவர்கள் செய்த சோதனைமுயற்சி வெற்றிபெற்றது. உழவர்களுக்கு அது பயனுள்ளதாக இருந்தது. தனிமனித இடைவெளியையும் கடைப்பிடிக்கமுடிந்தது. அப்பகுதியைச் சேர்ந்த 28 உழவர்கள், சதரா நகராட்சியின் உதவியோடு தங்களது உணவு விளைபொருள்களை ஒன்றுகூட்டி, குறிப்பிட்ட இடங்களுக்கு எடுத்துச்சென்று, ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிப்புகள் செய்து, புதிய உணவுப்பொருள்கள் வாங்கவிரும்பும் குடும்பங்களின் கவனத்தை ஈர்க்கின்றனர்.

நெருக்கடி: உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தல்

தீர்வு: நேரடி உழவர்-நுகர்வோர் இணைப்புகள்

முன்பு உள்ளூர் சந்தையில் இடைத்தரகர்களைச் சார்ந்திருந்தபோது கிடைத்ததைவிட அதிக வருமானம் ஈட்டுகின்றனர்.

விவசாயிகள் பல வேன்கள் மூலமாக விளைபொருள்களை எடுத்துச்செல்வதற்கு அனுமதி வாங்கப்பட்டது. இது வீடுகளுக்கு நேரடியாக வழங்கும் திட்டமாக மாற்றிக்கொள்ளும் வாய்ப்பாக உழவர் கூட்டமைக்கு அமைந்தது. தினமும் ரூ1200-1500 தினவாடகைக்கு அமர்த்தப்பட்ட இந்த வேன்கள், பல்வேறு குடியிருப்புகளுக்குச் சென்று, வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விற்றன. ஏப்ரில் 2020ல், 250 வீடுகளை அவை சென்றடைந்தன.

தனிமனித இடைவெளியைக் கடைப்பிடிப்பது சாத்தியமற்ற கூட்டமான சந்தைகளைவிட இது பாதுகாப்பான அணுகுமுறை. இடைத்தரகர்களை நீக்கியது விவசாயிகளுக்கு லாபத்தைப் பெருக்கியது. நியாயமான விலை, எளிதாகக் கிடைப்பது, புதிதாக இருப்பது என்பவற்றால் வாடிக்கையாளர்களுக்கும் இம்முறை பிடித்துள்ளது. உணவுப்பொருள்கள் தொடர்ந்து கிடைப்பதால், தேவையில்லாமல் அவற்றைக் குவித்துவைப்பதைத் தடுக்கிறது.

படிப்பினைகள்

நேரடி, உள்ளூர், பரவலாக்கப்பட்ட உழவர்-நுகர்வோர் இணைப்புகள் உற்பத்தியாளர்கள், நுகர்வோர், சுற்றுச்சூழல் என்று அனைத்துத்தரப்புகளுக்கும் பயன் தருகின்றன. உள்ளூர்ச் சமூகங்களுக்கு அதிகாரம் வழங்குகின்றன; நேர்நிறையான ஊரக-நகர உறவுகளை ஏற்படுத்துகின்றன; பொதுவாக, சமூகங்கள் கோவிட் போன்ற நெருக்கடிகளைச் சந்திப்பதற்கான திறனை வலுப்படுத்துகின்றன.

இப்போதிருக்கும் சவால், இத்தகைய மாதிரி கோவிட்19 நெருக்கடிக் காலத்தையும் தாண்டி நீடிக்குமா என்பதைக் காண்பதுதான்; மேலும், ஆரோக்கியமான இயற்கை வேளாண்முறைகள் ஊக்கப்படுத்தப்படுமா என்றும் காணவேண்டும்.

தொடர்பு

சன்சிட் துமால் - துணைத் தலைமை அதிகாரி, சுகாதாரத்துறைத் தலைவர், சதரா நகராட்சி (சதரா மாவட்ட ஆட்சியர் அலுவலகம்: 02162232175)

நெருக்கடி: உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தல்

தீர்வு: நேரடி உழவர்-நுகர்வோர் இணைப்புகள்

நிழற்பட உதவி நவதர்சனம்

(இ) நவதர்சனம் சுயவுதவிக்குழு நடவடிக்கைகள் (வ) நவதர்சனம் உணவு கூட்டுறவு உறுப்பினர்கள்

நவதர்சனம் சமூக ஆதரவுபெற்ற விவசாயம்

நவதர்சனம் (http://navadarshanam.org/) 1990ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு சிறு சமூகக்குழு. இது தமிழக கிராமப்புறத்தில், ஒரு கானகத்தினருகே, பெங்களூரிலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ளது. நவீன வாழ்வியலுக்கும் சிந்தனைக்கும் மாற்றுகளை ஆராய்ந்துவருகிறது; சூழலியல் சமநிலையையும் அக அமைதியையும் நாடுகிறது. இதன் அங்கத்தினர்கள் சூழல் சீரமைப்பு, காடுகளைக் காப்பது, மாற்று எரி/மின் ஆற்றல், வளங்குன்றா இயற்கை வேளாண்மை, நீர் மேலாண்மை, உடல்நலம், நலமான மரபான உணவுவகைகளைப் பரப்புவது என்று பல துறைகளில் சோதனைகள் செய்துவருகின்றனர்.

சுயஉதவிக்குழுவாக இயங்கும் ஓர் உணவு முன்னெடுப்பை உள்ளூர் கிராமமக்களைக் கொண்டு தொடங்கி, தொடர்ந்து வழநடத்தி வருகின்றனர். இதன் மூலம் பெங்களூரிலுள்ள நகர்ப்புற நுகர்வோர்க்கு முழுமையான, இயற்கை உணவுவகைகளை வழங்கும் அதே வேளையில் கிராம வாழ்வாதாரங்களையும் மரபான திறன்களையும், வேளாண் சூழ்மண்டலங்களையும் பாதுகாக்கின்றனர். 2017ம் ஆண்டு, இச்சுயஉதவிக் குழு சமூக ஆதரவு வேளாண்மை(CSA) என்ற முன்னெடுப்பை எடுத்தனர். இதன்மூலம் நகர்ப்புற வாடிக்கையாளர்கள் வாராந்திர காய்கறிகள், பழங்கள், மளிகைப்பொருள்கள் ஆகியவை அடங்கிய (சுற்றுச்சூழலுக்கேற்ற) பொட்டலங்களுக்குத் தரும் உறுதிப்பாடுகளுக்கேற்ப உள்ளூர் இயற்கை விவசாயிகள் தமது பணிகளைத் திட்டமிட முடிகிறது. இந்நிறுவனத்தின் எல்லா லாபங்களும் கிராமத்தின் உணவு உற்பத்தியாளர்களுக்குப் போய்ச்சேர்கின்றன.

நெருக்கடி: உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தல்

தீர்வு: நேரடி உழவர்-நுகர்வோர் இணைப்புகள்

இவர்கள் அளிக்கும் விதிமுறைகளைப் பின்பற்ற முடிந்த விவசாயிகள் அனைவருக்கும் சி.எஸ்.ஏ. பத்து மடங்கு முதல் இருபது மடங்கு வரை அதிக வருமானத்தை அதே அளவு நிலத்தில் ஈட்ட வழிசெய்துள்ளது.

தமிழக எல்லைக்குள் இருப்பதால், இரு மாநிலங்களுக்கிடையே செல்வதற்குத் தேவையான உரிமங்களைப் பெறுவதிலும், மாநில எல்லையைக் கடந்து உணவுப்பொருள்களை வழங்குவதிலும் கோவிட் பொதுமுடக்கம் ஒரு பெரிய சவாலாக அமைந்தது. எனினும், சி.எஸ்.ஏ. தடைபடாமல் உணவுப்பொருள்களை வழங்கிவந்துள்ளது. இல்லையேல், உள்ளூர் விவசாயிகள் பெரும் இழப்புகளைச் சந்தித்திருக்க நேர்ந்திருக்கும். பெங்களூரில் சிவப்பு மண்டலங்களில் சந்தைக்குச் செல்ல வழியில்லாததால், நகர்ப்புற வாடிக்கையாளர்கள் சி.எஸ்.ஏ. புதிதான இயற்கைப் பொருள்களைக் கொண்டுவந்து சேர்த்ததை நன்றியுடன் நோக்குகின்றனர். பரவலான வழங்கல் மையங்கள் இருப்பதாலும், அவை திறந்தவெளியில் அமைந்துள்ளதாலும், உறுப்பினர்கள் தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடிக்கமுடிந்து நோய்ப்பரவலையும் தடுக்கமுடிகிறது.

படிப்பினைகள்

மேற்கூறிய இரண்டு முன்னெடுப்புகளிலிருந்து கற்றதுபோகக் கூடுதலாக நவதர்சனம் எடுத்துக்காட்டில் நியாயமான கிராம-நகர்ப்புற இணைப்பின் வலிமையைக் காண்கிறோம். கோவிட் பொதுமுடக்கத்தால் நேர்ந்த இடர்ப்பாடுகளையும் மீறிச் செயல்படமுடிந்திருக்கிறது.

தொடர்பு

கோபி சங்கரசுப்பிரமணி, navadarshanam@gmail.com

நிழற்பட உதவி - நவதர்சனம்

நவதர்சனம் உணவுக் கூட்டுறவு உறுப்பினர்கள்

நெருக்கடி: உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தல்

தீர்வு: நேரடி உழவர்-நுகர்வோர் இணைப்புகள்

உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மைக்கும் நகரங்களில் உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டச்சத்துமிக்க உணவுகள் நிறைந்திருத்தலுக்கும் பரிந்துரைகள்:

- உள்ளூர் உற்பத்தியாளர் சந்தைகளை பரவலாக்கி அமைத்து, முதன்மை உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் எளிமையாக அணுகும் வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். இவை இரண்டு கிராமப்பகுதிகளுக்கு இடையில் இருக்கலாம், அல்லது கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையில் இருக்கலாம்.
- இயற்கை விவசாயிகள், சிறு-குறு விவசாயிகள், கைவினைஞர்கள் தயாரிக்கும் பொருள்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும். பெரும் உற்பத்தியாளர்கள் அனுமதிக்கப்பட்டால் அவர்கள் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கக்கூடாது.
- பெருநிறுவனங்களை இத்தகைய சந்தைகளில் அனுமதிக்கக்கூடாது.
- முழுத்தகவல்களையும் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் கிடைக்கச்செய்து நியாய விலையை நிர்ணயிப்பதற்கு வழிவகுக்கவேண்டும்; இருதரப்புக்குமேற்ற திறந்தமுறையில் பேரம் பேசுவதற்கு வழிசெய்யவேண்டும்.
- மானியங்கள் மூலமும், நுகர்வோரும் பிறரும் செய்யும் அறம்சார்ந்த முதலீடுகள் மூலமும், நியாயவிலைக் கடைகளில் சிறப்பு ஏற்பாடுகள் செய்தும், சந்தையில் கட்டமைப்புச் செலவு, போக்குவரத்துச் செலவு போன்ற உற்பத்தியாளர்களின் சில செலவுகளை ஏற்றுக்கொண்டும் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கும் இயற்கை விவசாயப் பொருள்கள் கிடைக்கச்செய்ய வேண்டும்.
- சந்தையில் கைவினைப் பொருள்களுக்கான சமத்துவமற்ற ஆடுகளத்தை உருவாக்கும் சரக்கு மற்றும் சேவை வரியையும் (GST) இன்ன பிற வரிகளையும் நீக்க வேண்டும்.
- வயது வேறுபாடின்றி நகர்வாழ் நுகர்வோர்கள் முதன்மை உற்பத்தியாளர்கள் பணிசெய்யும் இடங்களுக்குச் சென்று, கண்டு, புரிந்து, உற்பத்தியில் கலந்து கொண்டு, முனைப்பற்ற நுகர்வோர் நிலையிலிருந்து புரிதல்மிக்க கூட்டாளியாக உருமாறுவதற்கு முன்னேற்பாடுகள் செய்யவேண்டும்.

நிழற்படம்: சிருஷ்டி பாஜ்பாய்

நிழற்படம்: ஜாதுராம் ஹலாமி, இஜாம்செய்ன் கதேங்கே

(இ) மகாகிரம சபை; (வ) சல்ஹே கிராம மக்கள் கிராம கூட்ட நிதியிலிருந்து நிவாரணம் பெறுகின்றனர்

காடுசார் வாழ்வாதாரங்கள் - கொர்ச்சி, மகாராஷ்டிரா

2016ம் ஆண்டு, மகாராட்டிரத்தின் வட காட்சிரோலியில், 90 கிராமசபைகள் ஒன்றுகூடி மகாகிராம சபை (MGS) என்ற கூட்டமைப்பை உருவாக்கின. இது அவர்களது வாழ்வாதாரத்தை அச்சுறுத்திய சுரங்கப்பணிகளுக்கு எதிராக அணிதிரள்வதற்கும், உள்ளூர் வாழ்வாதாரங்களை உருவாக்குவதற்கும் அமைக்கப்பட்டது. நேரடி மக்களாட்சியை வலியுறுத்தல், உற்பத்தி வழிமுறைகளை உள்ளூர்மயமாக்கல், உயிர்ப்பன்மயம் பேணல் மூலமாகச் சூழலியற் சமநிலையை மீட்டல், பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுத்தல், பாலினப் பாகுபாடுகள் போன்ற சமூக உறவுநிலைகளை மாற்றியமைத்தல் ஆகிய நோக்கங்களுக்காக எம்.ஜி.எஸ். பணிசெய்துவருகிறது. இவற்றின் வாயிலாக, சுகாதார, கல்வி அமைப்புகள் உட்பட தற்போதைய வளர்ச்சி மாதிரியை, பழங்குடிகள் பெரும்பான்மையாக உள்ள பகுதியாகையால் அக்கண்ணோட்டத்தில் இவர்கள் கேள்விக்குட்படுத்துகின்றனர்.

வனவுரிமைச் சட்டம் 2006, (பட்டியலினப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்ட) பஞ்சாயத்து சட்டம் 1996 ஆகியவற்றைப் பயன்படுத்தி, 87 கிராமசபைகள் தங்கள் காடுகளை தாங்களே நிர்வகித்து, பயன்படுத்தி, வளம்பேணும் உரிமையைப் பெற்றுள்ளனர். இது பல நூற்றாண்டு கால மையப்படுத்தப்பட்ட அரசு அதிகாரத்தைத் தலைகீழாக்குகிறது. இதனால், காடுபடு பொருள்களைக் (சிறு வன மகசூல்) கொண்டு குடும்ப வருமானம் உயர்ந்துள்ளது; காடுகளின் சமூக வளம்பேணலும் நிர்வாகமும் மேம்பட்டுள்ளன.

முக்கியமாக, இது கிராம நிதியொன்றை ஏற்படுத்தவும், அதைப்பல சமூகப்பணிகளுக்குப் பயன்படுத்தவும், தேவைப்படும் குடும்பங்களுக்கு உடல்நலம், கல்வி ஆகியவற்றுக்கான ஆதரவளிக்கவும், வெள்ளம் வறட்சி உண்டாக்கும் பாதிப்புகளை எதிர்கொள்ளவும் இயலச்செய்துள்ளது. நிறைபொருள் ஈட்டியுள்ள கிராம சபைகள் பிற கிராமசபைகளுக்குக் கடன்வழங்கி நிதிநிறுவனங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

கோவிட் காலங்களில், காடுகளிலிருந்து பொருளீட்டுவதற்கான திறன் கிராம சபைகளுக்கிருப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. குக்டலே, சால்ஹே, ககனகட்டா, சங்கர்கோண்டி கிராமங்களில் பொதுவிநியோக உணவுப்பொட்டலங்கள் நிலமற்ற குடும்பங்களுக்கும், கணவனையிழந்தோர்க்கும், உடல் குறைபாடுடையவர்க்கும், புலம்பெயர் குடும்பங்களுக்கும் முன்னிரிமை தந்து வழங்கப்பட்டுள்ளன.

படிப்பினைகள்

உள்ளூர் அறிவுத்தொகுப்பை வளர்த்தெடுத்து, நேரடி மக்களாட்சியை அமுல்படுத்தி, இயற்கையையும் இயற்கைவளங்களையும் சமூகக்குழுக்களே ஆளுகை செய்தால் வாழ்வாதார உறுதியும், சூழலியல் வளங்குன்றாமையும் அடையமுடியும். இந்தியாவில் அரசிடமும் நிறுவனங்களிடமும் மையத்தில் அதிகாரத்தைக் குவிக்கும் பொருளாதார அரசியல் மாதிரி இதற்கு நேரெதிராக இருப்பதால், அடிப்படை மாற்றங்களைக் கோருகிறது.

தொடர்பு

சியாராம் ஹலாமி, 9420145861

நிழற்படம்: மஞ்சரி அசோக்

(இ) திருவனந்தபுரத்தில் குடும்பஸ்ரீ உறுப்பினர்கள் - முகக்கவசம் தயாரிக்கின்றனர்; (நடு) கொல்லம் மாவட்டத்தில் குடும்பஸ்ரீ உறுப்பினர்கள் சப்ளைக்கோவுக்காக மளிகைப் பொட்டலங்கள் கட்டுகின்றனர். (வ) குடும்பஸ்ரீ உறுப்பினர்கள் ஆலப்புழா மாவட்டம், மன்னஞ்சேரி பஞ்சாயத்து சார்பாக உணவளிக்கும்போது.

குடும்பஸ்ரீ, கேரளா

கேரள மாநில வறுமை ஒழிப்புத் திட்டத்தின் பகுதியாக 1998ம் ஆண்டு குடும்பஸ்ரீ தொடங்கப்பட்டது. இது கேரளாவில் ஒவ்வொரு பகுதியில் வசிக்கும் பெண்களையும் சமூகக்குழுக்களாக ஒருங்கிணைத்து, கிராமங்களிலும் நகரங்களிலும் பெண்கள் பொருளாதார-சமூக உரிமைகளைப் பெறும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சமூக அமைப்பு. கிராமங்களிலும் நகராட்சிகளிலும் உள்ள ஒவ்வொரு பெண்ணும் இச்செயல்பாட்டின் அங்கமாக இருக்கவேண்டும், இதன் நோக்கெல்லை உள்ளூர் அளவிலேயே இருக்கவேண்டும் என்பதே இதன் முதன்மையான இலக்கு. உணவுப் பாதுகாப்பிலிருந்து மருத்துக்காப்பீடுவரை, வீடுகட்டுவதிலிருந்து தொழில்வளர்ச்சிவரை, தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்திலிருந்து எச்சரிக்கைக் குழுக்கள் (ஜாக்கிரதா சமித்தி) வரை எல்லா அரசாங்க முன்னெடுப்புகளும், வளர்ச்சி அனுபவங்களும் குடும்பஸ்ரீ தரும் சமூக இடைமுகத்தைச் சார்ந்தே உள்ளன. இதனால் உள்ளூர் சுயாட்சி உறுதிசெய்யப்படுகிறது. இது வீட்டுப்பொருள்கள், விவசாய விளைபொருள் பக்குவப்படுத்தல், கைவினைப்பொருள்கள் உட்பட பலதரப்பட்ட உற்பத்தி முறைகளை முன்னிறுத்தி, பல லட்சம் பெண்கள் தங்கள் இடங்களிலேயே நல்ல வருமானம் ஈட்ட வழிசெய்கிறது.

கோவிட் காலத்தில், குடும்பஸ்ரீ அரசு நிவாரணப் பணிகளுக்கும் சமூகங்களுக்கும் முக்கியமான இணைப்பாக அமைந்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளோடு இணைந்து, குடும்பஸ்ரீ சமூகச் சமையலறைகளைத் தொடங்கி, வீட்டுத்தனிப்படுத்தலில் இருப்பவர்களுக்கும் வறிய மக்களுக்கும் வீட்டிலேயே உணவு வழங்கிவருகிறது. கோவிட் விழிப்புணர்வு, அரசு விதிமுறைகள், உதவியெண்கள் குறித்த தகவல்களை கிராமங்களிலும் நகரங்களிலும்

கொண்டுசேர்ப்பதில் உயிர்ப்பான பங்காற்றியுள்ளனர். 20 லட்சம் பருத்தியாடை முகக்கவசங்களை 300 தையலகங்கள் மூலம் தயாரித்து விற்பனை செய்துள்ளனர். 21 குறுநிறுவனங்கள் மூலம் 5000 லிட்டர் தொற்றுநீப்பான்களை உற்பத்திசெய்துள்ளனர். கோவிட்-19 நோயாளிகளுக்கு மருத்துவம் செய்யும் மருத்துவப்பணியாளர்களுக்குப் பயன்படும் முகக்காப்பான்களையும் குடும்பஸ்ரீ தயாரித்துள்ளது.

படிப்பினைகள்

சமூக சுயாட்சி, சமூகக்குழுக்களுக்கும் பெண்களுக்கும் அதிகாரம் வழங்குதல், சமூகக்குழுக்களின் முனைப்பில் நடைபெறும் பணிகளைத் தொடங்குவது ஆகியவை மிகவும் இன்றியமையாதவை. நெருக்கடி நேரத்தில் மையப்படுத்தப்பட்ட முடிவெடுக்கும் முறையும் கட்டுப்பாடும் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பில்லை என்பதை நாம் இப்போது காண்கிறோம். ஒவ்வொரு மாநில அரசும் தங்களுக்கான விதிமுறைகளையும் செயல்முறைகளையும் வகுத்துக்கொண்டு, சவால்களைச் சந்திக்கத் தற்சார்புடன் இருக்கவேண்டும். எந்த அளவு அதிகாரமும் முடிவெடுத்தலும் பரவலாக்கப்படுகிறதோ அந்த அளவு நல்ல முறையில் நெருக்கடிகளை எதிர்கொள்ள நாம் தயாராக இருப்போம்.

தொடர்பு

ed@kudumbashree.org, 0471-2554717

நிழற்படம்: மஞ்சரி அசோக்

(இ) கேரளாவின் பத்தனம்திட்டா மாவட்டத்தில் பழங்குடியினர் பகுதிகளில் உணவுப் பொட்டலங்கள் வழங்குதல்; (நடு.இ) பத்தனம்திட்டாவில் குடும்பஸ்ரீ உறுப்பினர்கள் முகக்கவசம் தயாரிக்கின்றனர்; (நடு.வ) கோழிக்கோடு மாவட்டத்தில் தொற்றுநீப்பான் தயாரிக்கும்போது; (வ) (R) ஆலப்புழா மாவட்டத்தில் கைனகரி ஊராட்சி (சிடிஎஸ்) ஏற்பாடு செய்த நகரும் பல்பொருள் அங்காடி

நிழற்பட உதவி - சமாஜ் பிரகதி சகயோக்

(இ) மண்ணால் அணை கட்டுகின்றனர்; (வ) இதன் விளைவாக சேவன்பண்டி நாலா ஓடை வடிகால் பரப்பு ஏற்பட்டுள்ளது

மத்திய இந்தியாவில் வாழ்வாதார உறுதியும் நீர்ப் பாதுகாப்பும்

மத்தியப் பிரதேசத்தின் தேவாஸ் நகரில் அமைந்துள்ள சமாஜ் பிரகதி சகயோக் (SPS) இந்தியாவின் மிகப்பெரிய குடிமைச் சமூக முன்னெடுப்புகளில் ஒன்று. இது மத்தியப் பிரதேச, மகாராட்டிர மாநிலங்களில் 72 மாவட்டகளில் பத்து லட்சம் ஏக்கர் நிலத்தில் தனது கூட்டாளிகளுடன் செயல்பட்டுவருகிறது. முப்பது ஆண்டுகளாக பழங்குடிச் சமூகங்கள், பரலாக்கப்பட்ட நீர் மேலாண்மையும் நீர்ப் பாதுகாப்பும் விவசாயத்துக்கும் பிற வாழ்வாதாரங்களுக்கும் அடிப்படையாகக்கொள்ளுதல் ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்படுகிறது. சமநீதி, வளங்குன்றாமை, அதிகாரப்படுத்துதல், பெண்கள் உட்பட விளிம்புநிலை மக்களை முன்னிலைப்படுத்துதல் ஆகியவை அதன் அடிப்படைக் கொள்கைகள்.

120 கிராமங்களில் குடிநீர், பாசன நீர்த் தன்னிறைவு எய்தியதும், விவசாய உற்பத்தி வேகமாக அதிகரித்ததும், அவலப்புலம்பெயர்தல் 80% குறைந்துள்ளதும் இதன் பணிகளால் விளைந்த நன்மைகள். வாழ்வாதாரம், விவசாயம், விலங்குவளர்ப்பு, பிற பணிகள் சார்ந்த செயல்பாடுகள் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் பரவியுள்ளன. பூச்சுக்கொல்லி அடிக்காத விவசாயம் 120 கிராமங்களில், 9000 ஹெக்டேர் நிலத்தில் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் அடித்தளம் 500 கிராமங்களிலும் 15 நகரங்களிலும் (2018 கணக்குப்பட்டி) அமைக்கப்பட்டுள்ள பெண்கள் சுய உதவிக்குழுக்கள். மற்றுமொரு நிறுவன இடையீடாக ராம் ரஹீம் பிரகதி உற்பத்தியாளர் நிறுவனம் (RRPPCL) தொடங்கப்பட்டது; 4800 பெண்களையும் 300 சுயவுதவிக்குழுக்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. உடல்நலம், ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வும் மேம்பாடும் இதன் கவனமையத்தில் உள்ளன. நேரடியாக ஈடுபடுவது மட்டுமல்லாமல், பிற பகுதிகளிலிருந்து வருபவர்கள் பாபா ஆம்தே மக்கள் அதிகார மையத்தின்

மூலமாக கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. கோவிட் நெருக்கடியின்போது, மத்தியப் பிரதேசத்தின் தேவாஸ், கார்கோன் மாவட்டங்களில் 13000 குடும்பங்களுக்கு எஸ்.பி.எஸ். நிவாரணங்கள் வழங்கியுள்ளது. மிகவும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களை அடையாளம் காண்பதிலும், நிவாரணப் பொருள்கள் வழங்குவதிலும் சுயவுதவிக்குழுக்கள் மையப்பணியாற்றியுள்ளன. உள்ளூர் விவசாயிகளிடமிருந்து நிவாரணத்துக்குத் தேவையான கோதுமை வாங்கப்பட்டதால், அவர்கள் பொதுமுடக்கத்தின்போது குறைந்தவிலைக்கு விற்கத்தேவையில்லாமல் காக்கப்பட்டனர். கோதுமை மாவு தயாரிக்கப்பட்டு, ரூ.38 லட்சம் மதிப்புள்ள 118.4 டன் கோதுமைமாவு நிவாரணப் பொட்டணங்களில் சேர்க்கப்பட்டது. இதனால் மூன்று பயன்கள் விளைந்தன: கோதுமையை நல்ல விலையில் வாங்கி விவசாயிகளுக்கு ஆதரவளித்தது, கோதுமை மாவு செய்து விற்றதன் மூலம் RRPPCL நிறுவனத்தின் பங்குதாரர்களான விவசாயிகளுக்கு வருமான ஈட்டியது, இலவசமாக அத்தியாவசியப் பொருள்கள் வழங்கியதன்மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கியது.

அடுத்த கட்டத்தில், எஸ்.பி.எஸ். உள்ளூர் வாழ்வாதாரங்களை மேலும் வலுப்படுத்தி, பொருளாதார இன்னல்களுக்கு எதிரான நீண்டகால செயல்திட்டத்தை வலுப்படுத்த எண்ணியுள்ளது.

படிப்பினைகள்

சுய உதவி நிறுவனங்கள் மூலம் கிராமங்களை அதிகாரப்படுத்துதல், குறிப்பாக பெண்கள் மீது கவனம் குவித்தல், உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், அவலப்புலம்பெயர்தலைக் குறைத்தல் ஆகியவை நெருக்கடி நேரங்களில் சமூகங்களுக்கு பெரும் நெகிழ்வுறுதியை வழங்குகின்றன. அரசு நிவாரணப்பணிகளின் மீதான சார்பிலிருந்து சுதந்திரம் பெறவும் முடிகிறது.

தொடர்பு

மிகிர் ஷா, mihirbhai25@gmail.com

நிழற்பட உதவி சமாஜ் பிரகதி சகயோக்

(இ) கோவிட்19 நெருக்கடியின் போது சமாஜ் பிரகதி சகயோக் SPS நடத்தும் நிவாரணப்பணிகள்; (வ) ஹத்பிப்லியா பெண்கள் SPS சுயவுதவிக்குழுக்கள் கூட்டமைப்பின் பொதுக்குழுக் கூட்டம்.

நிழற்பட உதவி - கோஜ்

(இ) ராகு கிராமத்தில் கிராம சபை (வ) மகாராட்டிரத்தின் அமராவதி மாவட்டத்தின் ராகு கிராமத்தில் மூங்கில் கிடங்கு

மெல்காட் பகுதி, மகாராஷ்டிராவில் வன உரிமைகள் கொண்ட கிராமங்கள்

மகாராட்டிர மாநிலம் அமராவதி மாவட்டத்தில், மெல்காட் அடிவாரத்தில் உள்ள பாய்விகிரும் பிற கிராமங்களும் காடுகளைப் பேணுவதையும், பாழ்நிலங்களில் காடுகளை மீண்டும் உருவாக்குவதையும் முன்வைத்துள்ளன. வன உரிமைச் சட்டம் 2006ன் கீழ் சமூக வன வள (CFR) உரிமைகள் பெற்றுள்ளன. அவர்களது கிராம சபைகள் பல அரசு, குடிமைச்சமூக அமைப்புகளோடு ஒருங்கிணைந்து ஊரக வேலைவாயப்புத்திட்டம், பால் பண்ணைகள், மீன்வளர்ப்பு, இயற்கை விவசாயம் என்று பல வழிகளில் வருமானத்தைப் பெருக்கியுள்ளன. உள்ளூர் அணைகளைத் தூர்வாறி, அடிவண்டலை விளைநிலங்களில் பரப்பியதால், அவற்றின் உற்பத்தித்திறன் 3-4 மடங்கு உயர்ந்திருக்கிறது. வளங்களைப் பேணுவதால் காட்டுயிர்களுக்கு உறைவிடம் பெருகியுள்ளது.

கோவிட் நெருக்கடியின்போது, பாய்விகிர் தனது எல்லைகளை உடனடியாக மூடியது. வாரமொருமுறை அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதற்கு வணிக ஏற்பாடுகள் செய்து, விவசாயிகளுக்கு சரியான நேரத்துக்கு தங்கள் விளைநிலங்களில் வேலையாட்கள் கிடைக்கவும் வழிசெய்தனர். விவசாயத்துக்கோ, காட்டுப்பணிகளுக்கோ வெளியாட்கள் தேவைப்படாதவண்ணம் தங்கள் பிற பணிகளை மாற்றியமைத்துக்கொண்டனர். முற்றடைப்பின்போது விவசாயப்பணிகளும் காட்டுவேலைகளும் தடையின்றி தொடர்ந்துள்ளன. பெண்கள் தங்கள் சுய உதவிக்குழுக்கள் மூலம் முகக்கவசங்கள் செய்தனர். பொதுவிநியோகப் பொருள்கள் எல்லாக் குடும்பங்களையும் சரியான நேரத்துக்குச் சென்றடையப் பிற குழுக்கள் உதவின. கிராமத்துள் வருவோர் போவோர் விவரங்கள் முறையாகப் பதிவு செய்யப்படுகின்றன.

மற்றொரு கிராமமான ராகு மேலும் சிறப்பாகச் செயல்பட்டது. (திடமரத்துண்டுகளல்லாத) வன விளைபொருள்கள் (குறிப்பாக மூங்கில், தெம்புரிணி இலைகள்) மூலம் கிடைத்த வருவாயை குடும்பத்துக்கு ரூ.10000 என்று பகிர்ந்தளித்தது. வன உரிமைச் சட்டம், சமூக வன வள உரிமைகள் மூலம் ராகு கிராமம் தனது காடுகளைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக நிர்வகித்து, ரூ.மூன்று கோடிக்கு மேல் ஈட்டியுள்ளது. இந்த வருவாய் கிராம சபையில் முடிவுசெய்யப்படும் கூட்டு சமூகப்பணிகளுக்காகவும் காடுகளை நிர்வகித்து, பாதுகாத்துப் பணிசெய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

ராகு கிராமமும் தனது எல்லைகளை கோவிட்டின்போது மூடியது. அத்தியாவசியப் பொருள்களின் போக்குவரத்துக்கு ஓர் உள்ளூர் கிராமவாசியின் மூலம் ஏற்பாடுசெய்தது. விளைநிலங்களில் தொடர்ந்து பணி செய்தனர்; மூங்கில், இலுப்பை ஆகியவற்றின் அறுவடைக்குத் தயாராகினர். இவ்வாண்டு, 100 குடும்பங்கள் ஒவ்வொன்றும் 1 குவிண்டால் இலுப்பை மலர்களைச் சேகரித்துள்ளனர். கிராம சபை மக்களிடமிருந்து வாங்கி, சேமித்து, பிறகு சந்தைப்படுத்துவதற்கான திட்டம் வகுத்து அவல விற்பனையைத் தவிர்க்க முயல்கிறது. உள்ளூர் வங்கிகளின் சேவையை இதன்பொருட்டு பயன்படுத்தியுள்ளனர். இப்போது மூங்கில் அறுவடை செய்து, திறந்த ஏலம் மூலம் விற்க ஒரு மாத அவகாசம் அவர்களுக்கு உள்ளது. சந்தையின் மறுவினை எப்படியிருக்கும் என்பது குறித்த அச்சம் இருந்தாலும், ஏதேனும் வழிபிறக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உள்ளது.

படிப்பினைகள்

எப்.ஆர்.ஏ. போன்ற சட்டங்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலமும், உள்ளூர் சுயாட்சி மூலமும் தமக்கு அதிகாரம் ஏற்படுத்திக்கொண்டுள்ள கிராமங்கள் கோவிட் நெருக்கடி போன்றவற்றை நகரங்களைவிடச் சிறப்பாகக் கையாள முடிகிறது. அவர்களது நெகிழ்வுறுதி இத்தகைய தருணங்களில் வெளிப்படுகிறது. சரியான எண்மத் தொழில்நுட்பங்களைப் (உதாரணமாக, இன்றியமையாத சேவைகள், உள்ளூர் விளைபொருள்கள் குறித்த தகவல்பரிமாற்றத்துக்காக) பயன்படுத்துவதும் அவசியம்.

தொடர்பு

பூர்ணிமா உபாத்யாய், khojmelghat@gmail.com
07223-277292/9890359154/9422917732

ராம்லால், gramsabhapayvihir@gmail.com
7774877304

தீர்வு 01 — **நெருக்கடி:** கிராமங்களில் வாழ்வாதார உறுதியின்மை; அதன் விளைவாக நிகழும் புலம்பெயர்தல்

தீர்வு 02 — **தீர்வு:** மானுட உழைப்பு மிகுந்த சிறுதொழில்களும் கைத்தொழில்களும்

நிழற்படம் -ர.இளங்கோ

நிழற்படம்: ஆஷிஷ் கோத்தாரி

(இ) குத்தம்பாக்கம் சமூகக்குழுக் கூட்டம் (வ) குத்தம்பாக்கம் கிராமத்தில் சமத்துவபுரம் - வீடுகள், கடை.

தமிழ்நாட்டின் குத்தம்பாக்கம் கிராமத்தில் பொருளாதார மலர்ச்சி

சென்னைப் புறநகர்ப் பகுதியிலுள்ள குத்தம்பாக்கத்தில் ஏழு சிறு கிராமங்கள் உள்ளன. 1990களின் தொடக்கம்வரை, குத்தம்பாக்கம் பகுதிக்குச் சரியான சாலைகளோ உள்கட்டுமானங்களோ கிடையாது; வாழ்வாதாரங்கள் உறுதியாக இல்லை; சாதிய அடக்குமுறை நிலவியது; வீட்டில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான வன்முறை குறித்த புகார்கள் எழுந்தன. கள்ளச்சாராயம், கறுப்புச்சந்தை ஆகியவை கொழுத்தன.

இத்தகைய சூழலில், நகரத்தில் வேலைபார்த்துக்கொண்டிருந்த இளங்கோ ரங்கசாமி குத்தம்பாக்கம் திரும்பி, 1996ம் ஆண்டு ஊராட்சித் தேர்தலில் வெற்றிபெற்று கிராமத்தை முற்றிலும் மாற்றிவிட முயல்வதற்கு முடிவுசெய்தார். அடிமட்டத்தில் திட்டமிடுதல், உள்ளூர் மக்களைத் திரட்டி கிராமப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் ஆகிய முறைகளை அறிமுகம் செய்தார். அவரது ஆரம்பகட்ட நோக்கங்கள் கள்ளச்சாராயம், பெண்கள் மீதான வன்முறை, சாதியப் பாகுபாடுகள் ஆகிய சிக்கல்களைத் தீர்க்க முயல்வது. அவரது நீண்டகால நோக்கம் எல்லாருக்கும் வீடுகள் தருவது, சுய உதவிக் குழுக்கள் அமைப்பது, ஊராட்சிப் பணிகள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்குவது, உள்ளூர் வளங்கள் சார்ந்த வாழ்வாதாரங்களை உருவாக்குவது, போதாமைக்கொள்கை மீதின்றி மிகுதிக்கொள்கையின் மீது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல். சிறுதொழில் உற்பத்திக்கூடங்களில் 150 குடும்பங்களுக்கு உள்ளூரிலேயே வேலைவாய்ப்பு கிடைத்தது. மாநில அரசு வீட்டுத் திட்டமான சமத்துவபுரத்தில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த பல குடும்பங்களை குடியேற ஒப்புக்கொள்ளவைத்தார். பொருளாதார மலர்ச்சியின் விளைவாக பணிநிமித்தம் புலம்பெயர்வது குறைந்துள்ளது.

ஒரு பொறியாளராகவும் கண்டுபிடிப்பாளராகவும் உள்ள இளங்கோ பொதுவெளிகளிலும் வீடுகளிலும் பயன்படக்கூடிய மின்னாறல் மீதப்படுத்தும் தீர்வுகளையறியப் பணிசெய்தார். குறைந்த விலையில் சூரியவொளி மின்சாரக்கருவியை உருவாக்கினார்.

தீர்வு 01

நெருக்கடி: கிராமங்களில் வாழ்வாதார உறுதியின்மை; அதன் விளைவாக நிகழும் புலம்பெயர்தல்

தீர்வு 02

தீர்வு: மானுட உழைப்பு மிகுந்த சிறுதொழில்களும் கைத்தொழில்களும்

தமிழ்நாட்டில் ஊராட்சித் தலைவர்களின் ஆற்றலை வளர்த்து, கற்றுக்கொடுத்து, நல்ல வழக்கங்களைப் பரவச்செய்வதற்காகப் பஞ்சாயத்து அகாதெமி என்ற திட்டத்தைத் தொடங்கினார். இவற்றூடே கிராமத்துள் ஒரு தொடர்ந்த உரையாடலை வைத்திருந்து உள்ளூர் பங்கேற்பினை அதிகரிக்க முயன்றார். இளங்கோவைப் பொருத்தவரை முதன்மையான பணி, 'குடும்ப அளவிலும், குடும்பக் குழு மட்டத்திலும் தற்சார்பை எட்டும் திறன்களை வளர்த்து, தற்சார்பான கிராமங்களை நோக்கிச் செல்லுதல். இத்தகைய கிராமங்களின் வலைப்பின்னல் சுய அறிதலும் தற்சார்பும் பெற்ற பொருளாதார மண்டலமாக மாறும்.'

கோவிட்19 நெருக்கடிக்கு மறுவினையாக, சூரிய ஆற்றல் மூலம் நச்சுக்கொல்லிகளை எங்குவேண்டுமானாலும் செய்துகொள்ளும் முறையை வடிவமைத்துள்ளார். சமூகக்குழுக்கள் இந்த முறையைப் பயன்படுத்தி நச்சுக்கொல்லியையும் பிற சுகாதாரப்பொருள்களையும் உள்ளூரிலேயே தயாரித்து முழுச்சுகாதாரத்தைப் பேணலாம்.

படிப்பினைகள்

சிறுதொழில் உற்பத்தியின் மூலம் சிறுநகரங்களிலும் கிராமங்களிலும் உள்ளூரிலேயே பெருமளவு வேலைவாய்ப்புகளை வழங்கமுடியும். கூடுதலாக, சாதியத்தை மட்டுப்படுத்தப் புதுவழிகளும் போராட்டங்களும் இன்றியமையாதவை. இத்தகைய பொருளாதார சமூக உருமாற்றத்தின் மூலமும், கிராம மக்களை அவரவர் ஊர்களில் தங்கவைக்கப்பதற்கேற்ற சூழல்களை உருவாக்கி மதிப்பான வாழ்வும் வாழ்வாதாரமும் வழங்குவதன் மூலமும் அவலப்புலம்பெயர்தலைப் பெருமளவு தவிர்த்துவிட முடியும்.

தொடர்பு

இளங்கோ ராமசாமி, panchayatgovt@gmail.com, 9940682201

மேலும் பார்க்க, இளங்கோவுடனான கோவிட்கால உரையாடல்:
https://vscoronatimes.blogspot.com/2020/05/vikalp-varta-4-innovation-and.html

நிழற்பட உதவி - தி இந்து நாளிதழ்

நிழற்படம்: ஆஷிஷ் கோத்தாரி

(இ) இளங்கோ வடிவமைத்துள்ள சூரிய ஆற்றல்மூலம் நச்சுக்கொல்லி தயாரிக்கும் முறை (வ) குத்தம்பாக்கத்தில் உற்பத்திக்கூடம்.

நிழற்படங்கள்: ஆஷிஷ் கோத்தாரி

(இ) கட்ச் தமாபாய் மார்வாடா மாவட்டத்தில் மூத்த நெசவாளர் ஷாம்ஜி விஷ்ராம் சிஜு இளம் கரட் நெசவாசளருடன்; (நடு) பிரகாஷ் நாரண்பாய் வங்கர் புதிய மாற்றங்களுடன் மரபான கம்பள நெசவு செய்கிறார்; (வ) ஷீதல் ஹித்தேஷ்பாய் - ஜம்தடா கிராமத்தில் நெசவு செய்யும் பல இளம்பெண்களில் ஒருவர்

கட்ச் பகுதியில் கைத்தறி நெசவின் மறுமலர்ச்சி

இந்தியாவில் எல்லா கைவினைத்தொழில்களுக்கும் பொதுவாக ஏற்பட்டது போலவே, இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கட்ச் பகுதியில் கைத்தறி நெசவும் வணிகமும் கடுமையாகச் சரிவுற்றது. தொழில்சாலைகளில் பேருற்பத்தி செய்யப்படும் மலிவான பொருள்களின் நுழைவாலும், 1990களிலும் 2000களிலும் ஏற்பட்ட பல இயற்கைப் பேரிடர்களாலும் நிலை குன்றியிருந்தது. சில காலத்துக்குப்பன், பேரழிவுக்குப்பின் கட்ச் பகுதியை மீளுருவாக்கம் செய்யும் குடிமைச் சமூக முயற்சியின் பகுதியாக, கைவினை ஒருங்கிணைப்பு அமைப்பான கமீர், சில துடிப்பான நெசவாளர்களுடன் இணைந்து, கைத்தறி நெசவை மீட்டெடுக்க உறுதிபூண்டது. இயற்கைமுறையில் விளைவித்த நாட்டுவகையான காலா பருத்தியில் புதுமைகள் புகுத்தி, பருத்தி வேளாண்மையிலிருந்து துணிகள் தயாரிப்பு வரையிலான சங்கிலித்தொடலைச் சீரமைத்து, சந்தையில் மக்களை ஈர்க்கக்கூடிய புதிய பொருள்களை உற்பத்தி செய்தனர். சில ஆண்டுகளிலேயே இந்த கைத்தொழில் புத்துயிர் பெற்று, இந்தியாவிலும் பிற நாடுகளிலும் தனது இருப்பை நிலைநிறுத்தியுள்ளது.

இதனால், இப்பகுதி முழுமைமான நலமடைந்துள்ளது, குறிப்பாக பொருளாதார ரீதியாக. மேலும், இது இளைஞர்களை இதே தொழிலில் தொடர்ந்து செயல்படத் தக்கவைத்துள்ளது; அல்லது, பிற தொழில்களிலோ மத்திய-கிழக்காசியவிலோ பணியாற்றுபவர்களை மீண்டும் ஈர்த்துள்ளது. அவர்களை ஈர்ப்பது பொருளாதார உந்துதல் மட்டுமன்று. தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தும் நிறைவும், தம் உள்ளூரிலயே செயல்பட்டுக் குடும்பத்தோடு இருப்பதும், தமக்குத்தாமே முதலாளியாக இருப்பதும், தமது முன்னோர்களின் மரபினைத் தொடர்வதும்

முக்கியமான உந்துதல்களாக அமைந்துள்ளன. கட்ச் மரபின் சாரத்தை இழக்காமல், புத்தாக்கமும் படைப்பூக்கமும், புதிய அறிவும் அறிவுத்தொகுப்பு முறைகளும் மலர்ந்துள்ளன.

இதனோடு சேர்ந்து சமூக உறவுகளிலும் ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. இவற்றுள் சாதி (சாதியடுக்கின் கீழ்நிலையில் இருப்பதாகக் கருதப்பட்ட ஒரு சமூகத்தின் மீதான சாதியப்பாகுபாடு குறைந்துள்ளது), பாலினம் (பெண்களுக்கு அதிக பங்கும் பேசுதற்கான உரிமையும்), தலைமுறைகள் (இளைஞர்களின் தன்முனைப்பு, அதே வேளையில் பெரியவர்களுக்கான மரியாதையையும் வழங்குதல்) என்பவை இந்த சமூக உறவுமாற்றத்தில் அடங்கும்.

ஆனால், அவர்களது உற்பத்திப்பொருள்கள் தேசிய, சர்வதேசச் சந்தைகளை நோக்கி உற்பத்தி செய்யப்படுவதால் (மரபாக, உள்ளூர் பரிமாற்றமே நிகழ்ந்தது) நிகழ்ந்துள்ள மாற்றங்கள் இந்த கைத்தொழிலைப் பலவீனப்படுத்துவும் செய்துள்ளது. கோவிட் நெருக்கடியினால், உலகச் சந்தையின் ஏற்ற இறக்கங்களின் பாதிப்புகள் தெளிவாகத் தெரிகின்றன. இது வசதிகுறைந்த நெசவாளர்களையும் பிற தொழில்முறை நெசவாளர்களுக்காக உற்பத்திசெய்யும் ஒப்பந்த நெசவாளர்களையும் அதிகம் பாதிக்கிறது. 'வங்கர்' சமூகம் இதற்கு முந்தைய நெருக்கடிகளைச் சந்தித்ததுபோலவே தங்களுக்கு இயல்பான இணக்கத்தின் மூலமும் புத்தாக்கத்தின் மூலமும் இந்த நெருக்கடியையும் தாண்டி வரமுடியும் என்று நம்புகிறார்கள்.

படிப்பினைகள்

போதுமான புத்தாக்கமும் முதலீடும் இருந்தால், மரபான கைவினைத் தொழில்கள் நடைமுறைச்சாத்தியமான, மதிப்புக்குரிய வாழ்வாதாரங்களை வழங்கி, இளைய தலைமுறையினரை தக்கவைக்கவோ ஈர்க்கவோ முடியும். உள்ளூர் அறிவு, படைப்பூக்கம், தொழில்முனைதல் ஆகியவற்றை வளர்த்து, புதிய உத்திகளையும் வடிவமைப்புகளையும் கண்டறிந்து, பழமையான புதிய பாகுபாடுகளையும் ஏற்றதாழ்வுகளையும் எதிர்கொண்டு செயல்படுவது முக்கியமானது. இத்தகைய பணிகள் வெறும் தொழிலின்பொருட்டு அல்லாமல், பொருளாதாரத்தோடு சமூக, பண்பாட்டுக் கூறுகளை இணைத்துக்கொண்டுள்ள வாழ்வாதாரங்கள்.

தொடர்பு

கடிட் லகெரு, ghatit.laheru@khamir.org, 9979450131

இளம் நெசவாளர்களோடான கோவிட்கால உரையாடலைக் காண: https://vscoronatimes.blogspot.com/2020/04/vikalp-varta-2-youth-weave-new-story-in.html

கிராம வாழ்வாதாரப் பாதுகாப்பின்மைக்கும் அதன் விளைவாக நிகழும் புலம்பெயர்தலுக்குமான பரிந்துரைகள்

- உள்ளூர் வாழ்வாதரங்களையும் சந்தைகளையும் ஊக்குவித்தல், உழவர்கள், வனவாசிகள், மீனவர்கள், மேய்ப்பர்கள், கைவினைஞர்கள் போன்ற உற்பத்தியாளர்களுக்கு முன்னிலை அளித்தல்.
- இயற்கை சார்ந்த, இயற்கை வளங்கள் சார்ந்த வளங்குன்றா வாழ்வாதாரங்களை முன்னிறுத்துதல், அவர்கள் சார்ந்துள்ள சூழல்மண்டலங்களையும் சுற்றுச்சூழலையும் பேணுதல்.
- தற்சார்பையும் சுயாட்சியையும் மேம்படுத்துதல், கிராம சபைகளுக்கும் மகளிர் சபைகளுக்கும் பிற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதிகாரம் வழங்குதல், பெண்களும் பிற பாதிக்கப்படக்கூடிய மக்களும் முழுமையான பங்காற்ற அதிகபட்ச வாய்ப்பளித்து முன்னுரிமை வழங்குதல்.
- வெளிப்படையான, சமூகத்துக்கு பலனளிக்கக்கூடிய, சுழற்சிமுறைத் தலைமை கொண்ட கிராம நிதியை உருவாக்குதல்.
- உள்ளூர் நிர்வாகத்துக்கும் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் முன்னிரிமை வழங்கி, திட்டங்களையும் கொள்கைகளையும் சிறப்பாகச் செயல்படுத்துதல்.
- வன உரிமைச் சட்டம், பஞ்சாயத்து ராஜ் சட்டம், (பட்டியல் பகுதிகளுக்கு விரிவுபடுத்தும்) பஞ்சாயத்துச் சட்டம், ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய சட்டங்களை நடைமுறைப்படுத்த உதவுதல்; இவற்றின் அடிப்படையில் திட்டங்கள் வகுத்து, தொலைநோக்கில் உள்ளூர் வளங்களையும் சமூகக்குழுத் திறன்களையும் உருவாக்கி, தற்சார்பையும் சுயாட்சியையும் அடைவதற்கு வழிவகுத்தல்.
- நீண்ட தொலைவிலுள்ள சந்தைகளை அடிப்படைத் தேவைகளுக்குச் சார்ந்திருப்பை ஊக்குவிக்கும் திட்டங்களைப் படிப்படியாகக் குறைத்தல்.
- இயற்கையையும் இயற்கை வளங்களையும் மீளவழியில்லாது அழிக்கும் எல்லா வளர்ச்சிப் பணிகளையும் கொள்கைகளையும் மீளாய்வு செய்தல்.
- உள்ளூர் சமூகக்குழுக்களிலும் பரவலாக்கப்பட்ட அமைப்புகளிலும் தயாரிக்கமுடிந்த, பரிமாறிக்கொள்ளமுடிந்த பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கான ஊக்கத்தைப் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவதை நீக்குதல்.
- மானுட உழைப்பின் மூலம் செய்யக்கூடிய பொருள்களை இயந்திரங்கள் மூலம் செய்வதற்கான ஊக்கமளித்தலை நீக்குதல்.
- மக்களின் அடிப்படை உரிமைகளைக் காக்கும் சட்டங்களையும் இயற்கையையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் சட்டங்களையும் பலவீனப்படுத்துவதையும் நீர்த்துப்போகச்செய்வதையும், திறமையாய் மீறுவதையும் தடுத்தல்.
- நியாயமற்ற வரிகளையும், தீர்வைகளையும் (எ.டு.: ஜி.எஸ்.டி) கைவினைப்பொருள்கள்மீது விதிப்பைத் தவிர்த்தல்; வேளாண், கானக, மீன்வளப் பொருள்களுக்கும் கைவினைப் பொருள்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் மட்டுமே விற்குமாறு உற்பத்தியாளர்களைக் கட்டாயப்படுத்தாமல், குறைந்தப்பட்ச ஆதரவு விலை கிடைக்குப்படி செய்தல்;

நெருக்கடி: சமூகம் சுகாதார இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள முடியாமல் தவிப்பது

தீர்வு: சமூக சுகாதார அதிகாரமளிப்பு

சான்று 01 | சான்று 02 | பரிந்துரைகள்

நிழற்பட உதவி - குனரியா ஊராட்சி

(இ) குனரியா கிராமசபை; (வ) கட்ச் பகுதியில குனரியா கிராமத்தில் கணக்கெடுப்பு

குஜராத்தின் கட்ச் பகுதியில் குனரியாவில் ஊராட்சி தலைமையில் கோவிட்டுக்கு எதிர்வினை

குனரியா கிராமம் கட்சிலுள்ள பூஜ் நகரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக 73வது அரசமைப்புச்சட்ட திருத்தம் முன்னிறுத்தும் கிராம சுயாட்சியைச் செயல்படுத்துவதை நோக்கி நகர்ந்துள்ளது. தற்போதைய ஊராட்சித் தலைவர் சுரேஷ் சங்கா 2017ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல், பொதுமக்கள் பங்களிப்பையும் கூட்டாக முடிவுவெடுத்தலையும் அரசுத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதையும், அரசுத்துறைகளுக்கும் கிராம மக்களுக்கும் உள்ள இடைவெளிக்குப் பாலமைப்பதற்கும் வழிவகுத்துள்ளார்.

திட்டங்கள், கொள்கைகள், நிதியறிக்கைகள் ஆகியவை குறித்த பொருத்தமான தகவல்கள் தொடர் கூட்டங்கள் மூலமும் சமூக ஊடகங்கள் மூலம் மக்களுக்குக் கிடைப்பதால் அவர்களது பங்களிப்பும், அவர்களது வாழ்வை நேரடியாகப் பாதிக்கும் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வும், ஆளுகையில் வெளிப்படைத்தன்மையும் அதிகரித்துள்ளன. பெண்களது குரல்களை ஒலிக்கச்செய்வதற்கும் அவர்கள் கருத்துகளை வெளிப்படுத்தவும், சுழியத்திலிருந்து 50 விழுக்காடாக அவர்களது பங்கேற்பு அதிகரிக்கவும் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், உணவுப் பாதுகாப்புச் சட்டம் ஆகிய முற்போக்கான சட்டங்களையும் இந்த ஊராட்சி முனைப்புடன் நடைமுறைப்படுத்துகிறது. ஐ.நா.வின் வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான நேரடி முயற்சிகளும் உள்ளன.

குனரியா இப்பகுதியிலுள்ள ஊராட்சிகளை இணைப்பதையும் முன்னின்று செய்கிறது. 115க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை உடல்நலம், கல்வி, வேளாண்மை, விலங்குவளர்ப்பு, பெண்கள் பங்கேற்பு, சுத்தம், வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல் சார்ந்து ஒருங்கிணைத்து 16000 மக்களை எட்டியுள்ளனர்.

நெருக்கடி: சமூகம் சுகாதார இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள முடியாமல் தவிப்பது

தீர்வு: சமூக சுகாதார அதிகாரமளிப்பு

கோவிட் நெருக்கடியின் போது, கோவிட் குறித்த விழிப்புணர்வையும் பாதுக்காபு நடவடிக்கைகளையும் அதிகப்படுத்த இந்த ஊராட்சியினர் சமூக ஊடகங்களை முழுமையாகப் பயன்படுத்தினர்; உடல்நலம் குறித்த கணக்கெடுப்பும் வீடுவீடாக நடத்தினர். அனுமதிக்கப்பட்ட வணிகர்களும் உற்பத்தியாளர்களும் மட்டும் இன்றியமையாப் பொருள்கள் விற்க கிராமத்துள் நுழைய முடியும். 316 ஏழைக்குடும்பங்களுக்கும் ஊராட்சியிலிருந்து உணவு வழங்கினர். வசதியான குடும்பங்களும் பல விவசாயிகளும் மிகவும் வறுமையிலிருந்த 87 குடும்பங்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்தனர். பார்வையற்றவர்கள், பிற மாற்றுத்திறனாளிகள், தனித்திருக்கும் பெண்கள், பிற விளிம்புநிலை குடும்பங்கள் ஆகியோருக்கும் உணவு, மருந்துகள், பிற அவசர அவசியத் தேவைகளுக்கான நிவாரணம் வழங்கப்பட்டது. ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம், உள்ளூர் அதிகாரிகளை ஆலோசித்தபின், 106 தொழிலாளர்களுக்கு வேலை தரப்பட்டது.

ஒரு மிகவும் புதுமையான நடவடிக்கையாக, வீட்டிலுள்ள பெரியவர்கள் மூலமாக வீட்டில் அடைந்துகிடக்கும் குழந்தைகளுக்கு இசை, கைவினைகள், சமையல், மரபான தொழில்நுட்பங்கள், இணையம்வழி கற்றல் என்று பலவிதமாகக் கற்றுத்தர வைத்ததைச் சொல்லலாம். குழந்தைகள் அலுப்படைந்துவிட்டார்கள்; பள்ளிகளுக்குச் செல்ல ஏங்குகிறார்கள்; சில இல்லங்களில் பெரியவர்களின் வன்முறையைச் சந்திக்கிறார்கள் என்பதையெல்லாம் கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில், இந்த ஊராட்சிக்கென தனியே அமைப்பட்ட வார்டுகளில் கோவிட் பாதிப்படைந்தவர்களை அவசரச் சிகிச்சைக்காக அனுமதிக்கவும் திட்டங்கள் உள்ளன.

தொடர்பு

சுரேஷ் சங்கா, sureshchhanga@gmail.com, 9913055305

நிழற்பட உதவி - குனரியா ஊராட்சி

(இ) கோவிட் காலத்தில் முகக்கவசம் வழங்கல்; (வ) பேரிடர் மேலாண்மைக் குழுக் கூட்டம்

நெருக்கடி: சமூகம் சுகாதார இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள முடியாமல் தவிப்பது

தீர்வு: சமூக சுகாதார அதிகாரமளிப்பு

நிழற்பட உதவி: பழங்குடியினர் மருத்துவமனை

THI குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்துள்ளது. குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு 70% குறைந்துள்ளது.

கோவிட் நெருக்கடிக்குச் சுகாதார மேம்பாடடைந்த ஊராட்சியின் துரிதமான எதிர்வினை - சிட்டிலிங்கி, தமிழ்நாடு

பழங்குடியினர் மருத்துவமனை (THI) ஒரு லாபநோக்கற்ற அமைப்பு. தமிழ்நாட்டில் தர்ம்புரி மாவட்டத்தில் சிட்டிலிங்கி பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. அப்பகுதியிலுள்ள 'மலைவாசி' பழங்குடியினர் நலனுக்காகச் செயல்படுகிறது. 1993ம் ஆண்டு கேரளத்தைச் சேர்ந்த இளம் மருத்துவ இணையர்களான ரெஜி ஜார்ஜ் என்ற மயக்கவியல் நிபுணர், லலிதா ஜார்ஜ் என்ற மகப்பேறு மருத்துவர் ஆகியோரால் டி.ஹெ.ஐ. தொடங்கப்பட்டது. இவர்கள் இருவரும் காந்திய விழுமியங்களால் கவரப்பட்டவர்கள். இந்த மருத்துமனை ஒரு சிறிய மண் குடிசையில் தொடங்கியது. ஒரு ஆலோசனை அறையும், மகப்பேறு அறையும் மட்டுமே இருந்தன. இப்போது ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெற்ற முழுமையான மருத்துவமனையாகிவிட்டது. 6 மருத்துவர்களும், 30 செவிலியரும் ஆண்டுக்கு ஏறக்குறைய 1 லட்சம் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றனர்.

தொடர் செயல்பாட்டின் மூலமாகவும், உள்ளூர் மக்களின் ஒத்துழைப்போடும், இந்த முன்னெடுப்பு குழந்தை இறப்பு விகிதத்தை 1993ம் ஆண்டு 157/1000லிருந்து தற்போது 20/1000மாகக் குறைத்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் குழந்தைப்பிறப்பின்போது தாயின் மரணம் எதுவும் நிகழவே இல்லை. குழந்தைகளிடையே ஊட்டச்சத்தின்மை 70% விழுக்காடு குறைந்துள்ளது. இவர்களது கவனம் உடல்நலத்தின்மீது மட்டுமல்லாமல், சமூகத்தை நாடிச்செல்லும் திட்டங்களின் பகுதியாக இயற்கை வேளாண்மைக் கூட்டமைப்பு, லம்பாடிகளின் சித்திரத்தையலை மீளுருவாக்கும் கைவினை முன்னெடுப்பு, பெண் தொழில்முனைவோர்களை உருவாக்கும் திட்டம் ஆகியவை தொடங்கப்பட்டன.

நெருக்கடி: சமூகம் சுகாதார இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள முடியாமல் தவிப்பது

தீர்வு: சமூக சுகாதார அதிகாரமளிப்பு

சமூகத்தை ஒன்றுகூட்டும் இந்த முறையில் இப்பகுதியின் உள்ளூர் நிர்வாகத்தையும் வலுப்படுத்தியுள்ளனர். கோவிட்19 நோய்த்தொற்றுக்குச் சிட்டிலிங்கி ஊராட்சியின் துரிதமான எதிர்வினை இதற்கு ஒரு சிறந்த சான்று. நோய்ப்பரவல் குறித்த அறிவிப்பு வந்தவுடனேயே, ஊராட்சித் தலைவர் மாதேஸ்வரி ஓர் அவசரக்கூட்டத்தைக் கூட்டினார். ஆரம்ப சுகாதார நிலையம், டி.ஹெச்.ஐ., பிற அரசுத் துறைகள் ஆகியவை அடங்கிய குழு ஒன்றுகூடி பேரிடரைக் கட்டுப்படுத்தும் பணிகளை முடுக்கிவிட்டனர்.

ஊராட்சியின் எல்லா கிராமங்களிலும் (15000 மக்கள்தொகை) விழிப்புணர்வுப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆட்டோக்கள் மூலம் அறிவிப்புகள் அடிக்கடி செய்யப்பட்டன. தனிநபர் இடைவெளி எல்லாப் பொது கூடுதல்களின் போதும் கட்டாயப்படுத்தப்பட்டது. மளிகைக்கடைகள், உணவகங்கள் தவிர பிற கடைகள் மூடப்பட்டன. வெளியூரிலிருந்து வீடுதிரும்பியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். மருத்துவமனையில் ஒரு தனி வெளிநோயாளிகள் பிரிவைத் தொடங்கினர். வருமானம் ஈட்டும் நடவடிக்கையாக, உள்ளூர் தையல்காரர்கள் கிராம மக்கள் எல்லாருக்கும் முகக்கவசங்கள் தைக்க வைக்கப்பட்டனர். கூட்டத்தைக் குறைப்பதற்காக நியாயவிலைக் கடைகளில் டோக்கன் முறை அமுல்படுத்தப்பட்டது. கைகழுவும் விதிகளைப் பின்பற்றாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. சமூக ஊடகங்கள் வாயிலாக நாள்தோறும் நிலைத்தகவல் அளிக்கப்பட்டது.

படிப்பினைகள்

சுயாட்சி அதிகாரம் ஏற்படுத்திக்கொண்டு, உடல்நலம் குறித்த தங்கள் அறிவுத்தொகுப்பின் அடிப்படையில் செயல்படும் சமூகங்கள் கோவிட் போன்ற நெருக்கடிகளையும், பிற சுகாதார, மருத்துவப் பிரச்சனைகளையும், ஒப்புநோக்க எளிதில் சமாளிக்கின்றன. வெளி வல்லுனர்களைச் சார்ந்திருப்பது இந்த வகையில் குறைக்கப்பட்டு, மையக் கட்டமைப்புகள்மீதும் ஆட்கள்மீதும் உள்ள சுமை குறைக்கப்படும்.

தொடர்பு

ரெஜி, லிலிதா, regilalitha@gmail.com / thisittilingi@gmail.com, 9585899061, 9488344325

நெருக்கடி: சமூகம் சுகாதார இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள முடியாமல் தவிப்பது

தீர்வு: சமூக சுகாதார அதிகாரமளிப்பு

மருத்துவம் போன்ற நெருக்கடிகளைக் கையாள்வதற்கான உள்ளூர் திறன்கூட்டலுக்கான பரிந்துரைகள்

- உள்ளூர் மருத்துவ அமைப்புகள் (ஆரம்ப சுகாதார மையம் போன்றவை) அமைக்கப்படுவதையும் வலுப்படுத்தப்படுவதையும் உறுதிசெய்யவேண்டும். மருத்துவம், சுகாதாரம் சார்ந்த பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து, உள்ளாட்சி அமைப்பின் ஆளுகையின் கீழ், சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள், குடிச்சமூக அமைப்புகள் ஆகியவற்றின் உறுதுணையோடு கொண்டுவரவேண்டும். அதிகாரப் பரவலாக்கக் கொள்கையைப் பின்பற்றி, உள்ளூர் அளவில் செய்யக்கூடிய பணிகளை உள்ளூர் மட்டத்திலேயே செய்யவேண்டும். வட்டம், மாவட்டம், மாநில அளவிலான வசதிகள் சிறப்புச் சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகள் வழக்கமான முறைகளையும் புதிய சமூக ஊடகங்களையும் எல்லாவகையான தகவல் பரிமாற்றத்துக்காகவும் வெளிப்படைத்தன்மைக்காகவும் சீராகப் பயன்படுத்தவேண்டும் (திட்டங்கள், விதிகள், சட்டங்கள், அவசர நடவடிக்கைகள்).
- அத்தகைய அமைப்புகள் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள், தனிநபர்கள், அவர்களது குறிப்பிட்ட தேவைகள் குறித்த அவ்வப்போதைய தகவல்களைத் திரட்டி வைத்திருக்கவேண்டும்.
- பெண்கள், குழந்தைகள் ஆகியோரது கருத்துகளுக்கும் ஆலோசனைகளுக்கும் தனிக்கவனம் செலுத்துவதையும் உறுதிசெய்யவேண்டும்.
- அரசு ஊழியர்கள் துறைசார்ந்த தங்கள் தனித்தீவுகளில் அடையாமல் ஒருங்கிணைந்து, அரசுசாரா அமைப்புகள், உள்ளூர் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படச் செய்யவேண்டும்.
- உடல்நலம், உணவு, ஊட்டச்சத்து, வாழ்வாதாரம் (வேளாண்மை, கைவினை, தொழில்முனைதல்) குறித்த முழுமையான புரிதலும் திட்டமிடலும் நிகழ்வதை ஒருங்கிணைக்கவேண்டும்.
- எல்லாரும் வாழ்க்கை மூலமும், வாழ்க்கை முழுவதும் பயில்வதற்கும் கல்வி பெறுவதற்கும் சோதனைகள் செய்யவேண்டும். அவற்றில் ஓவியம், இசை, நடனம், உடல்நலம், ஆரம்ப சுகாதாரம் ஆகியவை அடங்கவேண்டும்.

இந்த ஆவணத்துக்கான ஆலோனைகளை வழங்கியவர்கள் அனந்து, சிருஷ்டீ பாஜ்பாய், சேதுலட்சுமி விஜயன், பூர்ணிமா உபாத்யாய், சங்கீதா ஸ்ரீராம், இஷ்டெயாக் அகமத், அலெக்ஸ் ஜென்சன், சுஜாதா பத்மனாபன், இளங்கோ ரங்கசாமி, சுஜித் சின்கா, மிகிர் ஷா, அதிதி சாஜ்வான், சுரேஷ் சங்கா, கிஜ்ஸ் ஸ்பூர், ஜூகி பாண்டே, கோபி சங்கரசுப்பிரமணி ஆகியோர். ஒருங்கிணைத்தவர் ஆஷிஷ் கோத்தாரி. தமிழில் மொழிபெயர்த்தவர் த.கண்ணன். வடிவமைப்பு நவீத் தாதன்.

மேற்கோள் காட்ட: விகல்ப் சங்கம், *'சாதாரண' மக்களின் அசாதாரணமான பணிகள்: தொற்றுநோய்க்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்* - முதல் தொகுதி, விகல்ப் சங்கம் மையக் குழு, பூனா, மே 2020

இது காப்புரிமையற்ற பதிப்பு. வணிகநோக்கற்ற செயல்பாடுகளுக்காக யார்வேண்டுமானாலும் தாராளமாகப்பயன்படுத்தலாம். உரிய மேற்கோள்களோடு அங்கீகாரம் கொடுத்தல் நலம். மேற்கோள் காட்டும்போது இதே போல காப்புரிமையற்று இருக்கவேண்டும்.

விகல்ப் சங்கம் நியாயமான, சமநீதி கொண்ட, வளங்குன்றா வழிகளின் மூலம் மனித, சூழலியல் நலம் விழையும் இயக்கங்கள், குழுக்கள், தனிநபர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் ஒரு தளம். இது தற்போதைய வளர்ச்சி மாதிரியையும், அதன் அடிநாதமாக உள்ள ஏற்றதாழ்வுகளையும் அநீதியையும் கொண்ட அமைப்பினையும் நிராகரிக்கிறது. நடைமுறையிலும் நோக்கத்திலும் புதிய மாற்றுகளுக்கான தேடலில் உள்ளது. மையக் குழுவில் 60 நாடெங்கிலுமிருந்து அமைப்புகளும் இயக்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர்.

மேலும் விபரங்களுக்குப் பார்க்கவும்: http://www.vikalpsangam.org/about/

Alternatives India VIKALP sangam

www.vikalpsangam.org

- ACCORD (Tamil Nadu)
- Alliance for Sustainable and Holistic Agriculture (national)
- Alternative Law Forum (Bengaluru)
- Ashoka Trust for Research in Ecology and the Environment (Bengaluru)
- BHASHA (Gujarat)
- Bhoomi College (Bengaluru)
- Blue Ribbon Movement (Mumbai)
- Centre for Education and Documentation (Mumbai)
- Centre for Environment Education (Gujarat)
- Centre for Equity Studies (Delhi)
- CGNetSwara (Chhattisgarh)
- Chalakudypuzha Samrakshana Samithi / River Research Centre (Kerala)
- ComMutiny: The Youth Collective (Delhi)
- Deccan Development Society (Telangana)
- Deer Park (Himachal Pradesh)
- Development Alternatives (Delhi)
- Dharamitra (Maharashtra)
- Ekta Parishad (several states)
- Ektha (Chennai)
- EQUATIONS (Bengaluru)
- Gene Campaign (Delhi)
- Greenpeace India (Bengaluru)
- Health Swaraaj Samvaad (national)
- Ideosync (Delhi)
- Jagori Rural (Himachal Pradesh)
- Kalpavriksh (Maharashtra)
- Knowledge in Civil Society (national)
- Kriti Team (Delhi)
- Ladakh Arts and Media Organisation (Ladakh)
- Local Futures (Ladakh)
- Maati (Uttarakhand)
- Mahila Kisan Adhikar Manch (national)
- Mazdoor Kisan Shakti Sangathan (Rajasthan)
- National Alliance of Peoples' Movements (national)
- Nirangal (Tamil Nadu)
- North East Slow Food and Agrobiodiversity Society (Meghalaya)
- Peoples' Science Institute (Uttarakhand)
- Revitalising Rainfed Agriculture Network (national)
- reStore (Chennai)
- Sahjeevan (Kachchh)
- Sambhaavnaa (Himachal Pradesh)
- Samvedana (Maharashtra)
- Sangama (Bengaluru)
- Sangat (Delhi)
- School for Democracy (Rajasthan)
- School for Rural Development and Environment (Kashmir)
- Shikshantar (Rajasthan)
- Snow Leopard Conservancy India Trust (Ladakh)
- Social Entrepreneurship Association (Tamil Nadu)
- SOPPECOM (Maharashtra)
- South Asian Dialogue on Ecological Democracy (Delhi)
- Students' Environmental and Cultural Movement of Ladakh (Ladakh)
- Thanal (Kerala)
- Timbaktu Collective (Andhra Pradesh)
- Titli Trust (Uttarakhand)
- Tribal Health Initiative (Tamil Nadu)
- URMUL (Rajasthan)
- Vrikshamitra (Maharashtra)
- Watershed Support Services and Activities Network (Andhra Pradesh/Telangana)